நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

செந்தமிழ்

பகுதி - 8
தொகுதி - 111
திருவள்ளுவர் ஆண்டு - 2048

திங்கள் இதழ்
விலை ரூ. 20
ஆகஸ்ட்- 2017

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி

கல்லூரிக்குழு

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு)	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் செ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். க.சந்திரசேகரன் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். சு.விஜயன் முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் 4

2. சிலப்பதிகாரப் புதையல்கள்-மங்கல வாழ்த்துப் பாடலின்மாண்பு 6
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. இராமானுசரும் தமிழும் (சென்ற இதழின் தொடர்ச்சி)
பேராசிரியர் ப.மருதநாயகம் 12

4. ஆய் ஈற்று வினைப் பகுதிகள்
பேராசிரியர் இரா.கோதண்டராமன் 18

5. சங்கத்தமிழன் பயன்பாட்டில் நாணயம்(காசு)
முனைவர் பு. இந்திராகாந்தி 24

6. தமிழில் ஒப்பியல்-இலக்கிய, இலக்கண ஆய்வுகள்
(சென்ற இதழின் தொடாச்சி)
முனைவர் உ.கருப்பத்தேவன் 28

7. சங்கச் செய்திகள் 38

வலைதளம்: www.maduraitamilsangam.com
: www.senthamilcollege.com
மின்னஞ்சல்: maduraitamilsangam@yahoo.co.in
: principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள் கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

காப்பிய ஆசிரியன் தான் எடுத்துக் கொண்ட பொருளைத் தொடக்கம் முதல் இறுதி வரை இயைபுறுத்திக் காப்பியத்தை வழி நடத்தி அதன் உள்ளீடாக என்றும் மாறா உண்மைகளைக் கற்பவருக்குக் கற்பிக்கும் இயல்புடையவன். பலமுறை கற்பதற்குரிய ஆழமும் பொருளும் சொல்லின் இனிமையும் எளிமையும் உள்ளத்திற்கு ஒளியும் செவிக்கு இன்பமும் உடைய காப்பியம் காலத்தைவென்று மனிதமனத்தை ஆட்கொள்கிறது.

காப்பியப் பொருண்மையையும் அதன் இயைபையும் காப்பியத் தொடக்கமே எடுத்துரைப்பதைக் கட்டுரை ஆசிரியர் இளங்குமரனார் அரும்பத உரைகாரர் வழி உரைப்பது காண்க. பாட்டுடைத் தலைவியின் மனத்திண்மை தீமையை எதிர்த்து நின்று முறைவழுவிய அரசியலை அழித்து அறம் நிலைநிறுத்திய சிறப்பால் அடிகளும் அவளை முற்கூறினார் என அரும்பதவுரை ஆசிரியர் கூற்றின் வழித் திங்களும் கண்ணகியும் முற்கூறப்பட்ட செய்தி எண்ணித் திளைத்தற்குரியது.

திங்களும் ஞாயிறும் உடலின் இருமைக் கூறுகளாகிய தட்ப வெப்ப சமன்பாடு போன்று தலைவன் தலைவி இல்லறம் காத்தல் மங்கலம் என்ப என ஆசிரியர் நயம் காண்பது வாழ்க்கைச் செய்தியும் வாழ்நாள் செய்தியுமாம்.

'இராமானுசரும் தமிழும்' என்னும் தலைப்பின் கீழ் இப்பகுதியில் பேராசிரியர் ப.மருதநாயகம், சங்கச் செவ்வியலக்கியம் புறநானூறு, பரிபாடல் போன்ற நூல்களின் கவிதைகள் பக்தி இலக்கியத்திற்குத் தோற்றுவாய் செய்துள்ளதையும் இறையியல் கொள்கைகள் உருமாற்றம் பெற்றிருப்பதையும் எடுத்துரைக்கிறார். வைணவ சமயக் கொள்கைகள், கவிதைகள் சங்க இலக்கியத்தில் முகிழ்த்துள்ளன; பக்தி இலக்கியம் அவற்றை உள் வாங்கிக் கொண்டு இந்திய நாடு முழுவதும் பக்தி இயக்கம் பரவுவதற்கு வித்திட்டுள்ளன. வைணவ ஆச்சாரியர்கள், உரை ஆசிரியர்கள், ஆழவார்கள் வழி பக்தி மரபு உலகின் பிறபகுதிகளுக்குப் பரவியுள்ளது. பேரறிஞர் ஏ.கே இராமானுசன் என்னும் கல்வியாளர் தமிழ் இலக்கியங்களை ஆங்கில மொழியில் சிறந்த முன்னுரையோடு பதிப்பித்துள்ளார்; திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்பார் பாரதி; அந்த வகையில் ஏ.கே. இராமானுசன் தமிழ் இலக்கியச் செம்பொருளை மேலைநாட்டவர் நுண்ணிதின் உணரும் வழி செய்து வருகின்றார். அதனையும் ஆசிரியர் மருதநாயகம் எடுத்துரைத்திருப்பதும் தமிழ் கூறும் நல்உலகம் தமிழ் இலக்கிய மாண்புணர்ந்து கற்கை நன்று

பழந்தமிழ், தெலுங்கு மொழிகளில் ஆய் ஈற்று வினை வடிவங்கள் இறந்த கால வினையெச்சங்களாகவும் இறந்த காலப் பகுதிகளாகவும் நிகழ்வதைப் பேராசிரியர் இரா.கோதண்டராமன் **"ஆய் ஈற்று வினைப் பகுதிகள்"** என்னும் கட்டுரையில் சங்க இலக்கிய மேற்கோள்களுடன் ஆய்வு செய்துள்ளார். ஐ என்பதன் நெடில் வடிவம் ஆய் என்பதால் அய் என்பதன் குறியீடாகவே ஐ என்ற வரிவடிவைக் கொள்ள வேண்டும். எனவே ஐ என்பதை இரண்டு மாத்திரை அளவுள்ள நெடிலாகக் கொள் வதற்கில்லை என்னும் மொழிநூல் ஆசிரியர்கள் கொள்கை ஐகாரக் குறுக்கம் பற்றிய மரபிலக்கணிகள் கொள்கையோடு மாறுபடுவது சிந்திக்கத்தக்கது.

தஞ்சை குந்தவை நாச்சியார் மகளிர் கல்லூரிப் பேராசிரியர் பு.இந்திராகாந்தி அவர்கள் சங்க இலக்கியத்தில் காசு பயன்பாடு குறித்து வரும் செய்திகளை மேற்கோள்காட்டி பண்டை நாளில் மக்கள் வாழ்க்கை, இயல்பு வாழ்க்கை, இயற்கை வாழ்க்கையாக இருந்ததற்குக் காசுப் புழக்கம் அளவோடு இருந்தது என்னும் பொருளாதார உண்மையைச் சிந்திக்க வைக்கிறார்; மிதமிஞ்சிய நாணயப் புழக்கம் மக்களின் இயல்பு வாழ்க்கையைத் திசைதிருப்பி, பொருளீட்டலும் அதன் பெருக்கத்தால் மட்டுமீறி ஆடம்பர விளம்பரத்தனமான வாழ்க்கை முறைகளில் பொருளை வீணடித்தலும், இயற்கை வளங்களைச் சிதைத்து அழித்தல் என்னும் புதிய வணிகப் பயன்பாட்டு நாகரிகம் தலைஎடுத்து மனித இனத்தைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது. பேராசிரியர் இந்திராகாந்தியின் இக்கட்டுரை பொருளாதார அடிப்படைக் கோட்பாட்டைப் புரிந்து கொள்ளாமல் திசை தவறிச் செல்லும் மக்கள் இனத்தின் சிதிலமுறும் வாழ்க்கையை அறிவுறுத்துகிறது.

பேராசிரியர் உ.கருப்பத்தேவன் சென்ற இதழின் தொடர்ச்சியாகத் தமிழில் ஒப்பியல் இலக்கிய, இலக்கண ஆய்வுகள் என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. தமிழ் இலக்கணம் தொல்காப்பியம் தொடங்கி இன்று வரை இலக்கணம் குறித்த ஆய்வுரைகளைத் தொகுத்து வழங்கியுள்ளார். தொல்காப்பியர் முதல் இலக்கண ஒப்பாய்வு ஆசிரியர் என்பதை எடுத்துரைத்து அந்தணர் மறை மொழியாகிய சமசுகிருத மொழியோடு தமிழ் மொழி மாறுபடுவதை விளக்குகிறார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து இலக்கண ஒப்பாய்வு செய்த பெரும் புலவர்கள் பி.சா.சுப்பிரமணிய சாத்திரி, மகாவித்வான் தண்டபாணி தேசிகர், இ.சாமுவேல்பிள்ளை பேராசிரியர் வெள்ளைவாரணனார், செ.வை.சண்முகம் பேரா.காமாட்சி முதலான அறிஞர் பெருமக்கள் தமிழ் இலக்கண இலக்கிய ஒப்பீட்டு ஆய்வில் தடம் பதித்துள்ளதை கட்டுரை ஆசிரியர் எடுத்துரைத்து ஆய்வுக்குரிய பகுதியைச் சுட்டிச் செல்வது மேலும் ஆய்வாளர்களுக்கு வழி காட்டுகிறது.

சிலப்பதிகாரப் புதையல்கள் 4

மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு

முதுமுனைவர். **இரா.இளங்குமரனார்**

முடிகெழுவேந்தர் மூவருக்குமுரிய முத்தமிழ்க் காவியத்தை முறை வழுவாமல் இயற்றிய பெருமை இளங்கோ வடிகட்கு உண்டு என்பது நாடறிந்த உண்மை. மூவேந்தரையும் ஒப்ப மதித்துப் பாடிய உயர்வே அன்றிச் சமயக் கோட்பாட்டிலும் நடுவுநிலை நின்று அவ்வவர்க்கு அவ்வவர் சமயத்தராய்த் தோன்றித் தமக்கென எல்லோருக்கும் ஒப்பும் பொதுச் சமயத்தினைக் கொண்ட பெருமையும் அடிகட்கு உண்டு. இது நூலில் பரந்துபட்டுக் காணக்கிடப்பினும் எடுத்த எடுப்பிலேயே–மங்கல வாழ்த்துப் பாடலிலேயே நிலை நாட்டி விடுகின்றார் அடிகள்.

மங்கல வாழ்த்துப் பாடத் தொடங்கிய அடிகள் இருவகை மங்கல வாழ்த்துகளை நம் முன்னர் வைக்கின்றார். முன்னது தங்கூற்றாகக் கூறும் *மங்கல வாழ்த்து*; அஃது இயற்கைப் பொருள்களைக் கொண்டு, இறை உண்மை நிலை நிறுத்தும் தொன்மைத் தமிழ்ச் சமயத்தின் உயர் கோட்பாட்டை விளக்குவது. பின்னது 'கொடியன்னார்' கூற்றாகக் கூறும் மங்கல வாழ்த்து. அது, கோவல கண்ணகியரை மங்கல அமளியிலே ஏற்றிவைத்து மலர் தூவி வாழ்த்தும் திருமண வாழத்தாய் அந்நாளைத் தமிழக நிலைமையை நிறுவுவது. *இவ்விரண்டு வாழ்த்துகளையும் உடைமையால் முதற்பகுதி* **மங்கல வாழ்த்துப்பாடல்** என்னும் பெயர் பெற்றதாகும்.

மங்கல வாழ்த்துப்பாடும் அடிகள் திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் ஆகிய நான்கினையும் முறையே வாழ்த்துகின்றார். இம்முறை வைப்பிற்குத் தக்க காரணம் ஏதேனும் இருத்தல் இன்றியமையாததாம். **ஞாயிற்று வணக்கமே** மக்கள வழிபாட்டில் முதன்மை பெற்று நிற்கின்றது. ஞாயிற்றுக்கிழமையே முதற்கிழமை என உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. அறிவியல் உலகமும், ஞாயிற்றினின்று பிரிந்து வந்த கூறுகளே திங்கள் முதலாய அணடங்கள் என்று ஆய்ந்துரைக்கின்றது பண்டைப்புலவர்கள் பலரும் ஞாயிற்றுக்கு முதன்மை தந்ததுடன், ஞாயிற்று வணக்கம் உண்மையையும் கூறியுள்ளனர் எனினும் ஞாயிற்றை முன்னதாகக் கூறாது அடிகள் **திங்களை முதற்கண் வைத்துப் போற்றியதன் உட்கிடை** என்ன என்பதை நுணுகிப் பார்த்தல் வேண்டும்.

அடிகள் உள்ளத்தே ***கண்ணகியார்*** நீங்கா இடம் பெற்றுவிட்டார். மனித நிலையோடு பிறந்து தெய்வநிலை எய்தும் அளவுக்கு இடம் பெற்றுவிட்டார். அத்துணைப் பெருமையினைக் கோவலனோ, பிறரோ எய்தி விட முடியவில்லை. அக்காரணத்தாலேதான் கண்ணகியார் காற் சிலம்பினையே, நூற்பெயராகக் கொண்டு காவியம் இயற்றினார் பதிகம் இயற்றியவரும் "சூழ்வினைச் சிலம்பு காரணமாக, நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என்று நூல் யாக்கப் புகுந்தார் அடிகள் என்றே கூறினார் இவ்வாறு சிலம்பினை முதலாகக் கொண்டு அடிகளார் எழுதிய ஒன்றே கண்ணகியார் சிறப்புக்குத் தக்க சான்றாக இருத்தல் உண்மையாகவும் வெளிப்படையாகவே கண்ணகியாருக்கு மங்கல வாழ்த்துக் காதையிலே முதன்மை தந்து விடுகின்றார் அடிகள்

கோவல கண்ணகியரை அடிகள் அறிமுகப்படுத்தி வைக்கும் போது ***கண்ணகியாரைத் தான் நம்முன் கொண்டு நிறுத்துகின்றார்.***

"மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண்டுஅகவையாள்;
.... பெயர் மன்னுங் ***கண்ணகி என்பாள்"***

என்று பாடுகின்றார். இதன் பின்னரே கோவலனைக் கொண்டு வந்து நிறுத்தி,

"வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பான்
இருநிதிக்கிழவன் மகன் ஈரெட்டாண்டு அகவையான்
*............................***கோவலன் என்பான்"***

என்று பாடுகிறார்

பெண்ணை முற்படக் கூறவேண்டும் என்றோ, ஆணை முற்படக் கூறவேண்டும் என்றோ வரன் முறை ஒன்றும் இல்லை இருபாலரும் ஒப்ப மதித்து வாழ்ந்த பழந்தமிழ்ப் பண்பாடு இவ்வேற்றுமைக்கு இடம் அளிக்காது எனினும், அடிகள் கண்ணகியாரை முற்படக் கூறியது அவர் உள்ளகத்தே கண்ணகியார் தெய்வக்கோலம் காட்டியமையாலே தான். "கோவலன் கள்வனல்லன்; என் காற்சிலம்பினைக் கவரும் பொருட்டால் கொன்ற காவலனே கள்வன்" என்று நிலை நாட்டிய தீதுதீர் சிறப்பால் கண்ணகியாரை உள்ளுற எண்ணினார். இதனை எண்ணித் திளைத்தவருள் முதல்வராக அறியப்படுகின்றார் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் அவர் ***"இவளை முற்கூறிற்று; கதைக்கு நாயகியாகலின்"*** என்றார் இச்சொற்றொடரின் ஆழம் எண்ணி எண்ணி இன்புறற்பாலதாம் கண்ணகியாரை முற்படக்கூறிய காரணம் தெளிவாயிற்று. இனி திங்களை முற்கூறியது ஏன் எனக் காண்போம்.

கோவல கண்ணகியர் "மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை" அமர்ந்திருந்தனர். இதனை உவமைமுகத்தான் அடிகள் ***"கதிர் ஒருங்கு இருந்த காட்சி போல"*** இருந்தனர் என்றார். ***ஞாயிறும் திங்களும்*** ஒன்றுபட்டு இருந்தது போன்று கோவல கண்ணகியர் இருந்தனர் என்றாராம் இதுகொண்டு ஆடவர் பெண்டிரைக் கதிருடன் ஒப்பிட்டுக் கூறும் வழக்குண்மையினை அறியலாம்.

"அஞ்சுடர் நீள்வாள் முகத்தாயிழையும் மாறிலா
வெஞ்சுடர் நீள்வேலானும் போதரக்கண்-டஞ்சி
ஒருசுடரு மின்றி உலகுபா ழாக
இருசுடரும் போந்ததென் றார்"

என்னும் ***இத்திணை மாலைப்பாட்டு.***

தலைவனும் தலைவியும் காட்டுவழி செல்வதைக் கண்டவர்கள் அவர்களைத் தேடிக் கொண்டு வரும் செவிலித் தாய்க்கு உரைப்பதாக

அமைந்ததாம். "உலகு பாழாகுமாறு இருசுடரும் போந்தது போல்வது தலைவன் தலைவியர் ஆகிய இருவர் உடன்போக்கும்" என்றார்கள். இதில் தலைவன் தலைவியர் சுடர்கட்கு ஒப்பிடப்பட்டுள்ளதை அறியலாம்.

உதயணன் வாசவதத்தையுடன் கூடி நின்ற நிலைமையை வருணிக்கும் ***கொங்குவேளிர்.***

"மதியமும் ஞாயிறும் கதிதிரிந்தோடிக்
*கடனிற வானில் **உடனின்றாங்கு**"*

என்றும், தலைவனும் தலைவியும் தலைப்பட்ட நிலைமையை **இறையனார் களவியல்** உரைகாரர் **"வெங்கதிர்க்கனலியும் தண்கதிர் மதியமும்** தம்கதி வழுவித் தலைப்பெய்தாற போன்று" என்றும் கூறினர். இவற்றால் தலைவன் தலைவியரைச் சுடரொடு ஒப்பிட்டுக் கூறுவது பரவலான ஒரு வழக்கம் என அறியலாம். அவ்வழக்கைக் கொண்டே அடிகள், கண்ணகி கோவலர் திருமணம் கூறும் மங்கல வாழ்த்திலே இரு கதிர்களையும் குறிப்பிட்டு வாழ்த்தினார் இரு சுடர்கட்கும் இணையானவர்கள் தலைவி தலைவர் ஆதலால் என்க.

இங்குக் காட்டிய சான்றுகள் அனைத்தும், தலைவன் தலைவியரை இரு சுடர்க்கும் இணையாகக் காட்டுவதைத் தெளிவாக்குகின்றனவே அன்றி தலைவன் இச்சுடர், தலைவி இச்சுடர் என்று காணுமாறு இல்லை. ஆயின் தலைவன் எச்சுடர்க்கு நிகராவான்? தலைவி எச்சுடர்க்கு நிகராவாள்?

உலகைக் காத்து வருவன இரண்டாம் அவை தண்மையும், வெம்மையும் ஆம். தண்மைக் கூறே இல்லாப் பொருளோ, வெம்மைக்கூறே இல்லாப் பொருளோ உய்யா; பயன்படா; அதுபோல் உயிர் தாங்கும் மனித வாழ்வும் வெம்மையும் தண்மையும் இன்றிப் பயன்படாது மாந்தர் உடல் வெப்ப தட்ப நிலைச்சமன்பாட்டில் மிகினும், குறையினும் ஊறுபட்டு அல்லல் உறுத்துவதை எவரும அறிவர். **ஆதலாலே தான் உடலைத் தக்கவாறு பேணி, வெப்ப தட்பக்கூறுகளை ஒரு நிலையில் வைத்தல் தேவை. வெப்ப தட்பச் சமனிலை அமையா உடல் உடலன்று. இச்சமனிலை அமையாத் தனிவாழ்வும், கூட்டு வாழ்வும் வாழ்வு ஆகா.**

பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாகக் கொண்டவன் தீதற விளங்கும் ***திகிரியோன்*** என்னும் ***பெருந்தேவனார்*** வாக்கும், "சுட்டும் சுடர் விழிதான். கண்ணம்மா! ***சூரியசந்திரரோ?***" என்னும் ***பாரதியார்*** வாக்கும், ஞாயிறும் திங்களும் தெய்வத் திருக்கண்களாகக் குறிப்பிடுவதைக் கண்டறிக. "தண்மையொடு வெம்மைதான் ஆயினான்" என்னும் திருநாவுக்கரசர் திருவீழிமிழலைத் தேவாரத் திருமொழி இதனை விளக்கி நிற்கின்றது அன்றோ! வெம்மையும் தண்மையும் கலந்து நிற்கும் இறைவனை ***"அம்மையே அப்பா"*** என்றும், "அம்மையுமாய் அப்பனுமாய்" என்றும் கரைந்துருகிக் கண்ணீர் சிந்தி 'அன்பர்கள்' அழைப்பதை அறியார் யார்?

வெம்மையாய்—தண்மையாய்—இரண்டுமாய் நிற்கும் இறைவனை எய்த, மாந்தருக்கும் அத்தன்மைகள் வேண்டற்பாலவாம்

மக்களுள் வெம்மைத் தன்மையோடு விளங்குபவர் யாவர்? தண்மைத் தன்மையொடு இலங்குவர் யாவர்? முறையே ஆடவர் பெண்டிர் அல்லரோ? ஊக்கமிக்க ஆண்மைக்கு வெம்மையும், உள்ளன்பு மிக்க பெண்மைக்குத் தண்மையும் இயல்பாய் அமைகின்றன அல்லவா! இதற்கு ஏற்ப, வெம்மையாம் ஆண்மை தண்மையாம் பெண்மையை விரும்பி நிற்பதன்றோ திருமணம்! வெம்மையும் தண்மையும் ஒருங்குகூடி, ஒப்பநின்று ஒல்லும் வகையால் கடனாற்றி இல்லறம் இனிது காத்து இறுதியில் பெண்மைப் பிழம்பாக அமைவது அன்றோ கடப்பாடு! இதற்கு வழியென்ன? திருமணத்தின் பெயரால் ஆடவர் பெண்டிரை ஒன்றித்து வைத்தல் வேண்டும் இதுவே மங்கலம். இதற்குரிய வாழ்த்தே மங்கல வாழ்த்து!

மங்கல வாழ்த்தில் இயற்கை வடிவாய் இறைவனை முன்னிறுத்தி சமயப் பொதுமையைக் காட்டும் அடிகள், தலைவன் தலைவியர் தன்மைக்கு இணையாய கதிர்களை எடுத்துக் கொண்டார். இஃது இயற்கை வாழ்த்தாக மணவாழ்த்தாக அமைந்துவிடுகின்றது. "மணம்" இயற்கை தானே!

இது நிற்க, இருசுடர்க்கு இணையாய்க் கோவல கண்ணகியரை மனையறம் படுத்த காதையில் பொதுவாகக் கூறும் அடிகள் வஞ்சின மாலையிலும், ஊர்சூழ் வரியிலும் சிறப்பாகக் குறிப்பிட்டு உரைப்பவை நோக்குதற்குரியவையாம்.

கோவலன் கொலை நிகழ்ச்சியைக் கேட்டறிந்த கண்ணகியார் பொங்கி எழுந்தார்; விழுந்தார்; அவ்வீழ்ச்சி, நிலவினைப் பொழியும் திங்கள் கரியமுகிலோடும் பெரிய நிலத்தின்கண் வீழ்ந்தது போலாயிற்று. (18.30,1) இதன் பின் மதுரை மக்கள் சிலர், கொலையுண்ட கோவலனைக் கண்ணகியாருக்குக் காட்டுகின்றனர். கண்ணகியார் காணுகின்றார். ஆனால் கவலையே உருவாய கண்ணகியாரைக் கதிரோன் காணமாட்டானாய்த் தன்கதிர்களைச் சுருக்கிக் கொண்டு உலகுக்கு இருள்ஊட்டி மலையிடை மறைகின்றான்.(19–30–2)

கண்ணகியார் மண்ணிடை வீழ்ந்து புரள்வது **திங்கள் வீழ்ந்து புரள்வது போன்றது** என்று வஞ்சின மாலையிலே காட்டும் அடிகள், ஊர்சூழ் வரியிலே கோவலன் மறைவைக் கதிர்மறைவுடன் இணைத்துக் குறிப்பிடுகிறார். இவை, அவர் கண்ணகியாரைத் திங்களுக்கும், கோவலனை ஞாயிற்றுக்கும் இணையாகக் கொண்டமையை நிறுவத்தக்க அகச்சான்றுகள் ஆதற்குத் தக்கவையாகும்.

கண்ணகியாரை முற்பட அறிமுகப்படுத்துகின்றார் அன்றோ அடிகள்! அதற்கேற்பத் தண்சுடராம் திங்களை முற்பட வாழ்த்தினார். கோவலனைப பிற்பட அறிமுகப்படுத்தி வைப்பது போன்று வெங்கதிராம் ஞாயிற்றைப் பிற்படக் கூறினார். இவை மேற்போக்கில் திங்கள் ஞாயிறெனத் தோன்றினாலும் ஊன்றி உணர்வார்க்குப் புலமை நலங்கனிந்த வாழ்த்துக்களாக அமைந்துள்ளன.

திங்களையும் ஞாயிற்றையும் மங்கல வாழ்த்துப் பாடலில் போற்றிய அடிகள், அவற்றை அடுத்து மழையையும் இறுதியில் புகாரையும் போற்றுகின்றார் திங்களையும் ஞாயிற்றையும் அடுத்து மழையைப் போற்றியதற்கும், அதன் பின் புகாரைப் போற்றியதற்கும் செவ்விய காரணங்கள் உளவாதல் வேண்டும் ஏனெனில் இயைபின்றி எடுத்துக் கூறும் இயல்பு உடையரல்லர் அடிகள்

வெங்கதிர்க் கனலியின் வெப்பத்தால் 'நீர்' ஆவித் தன்மை அடைகின்றது மண்ணிடை நீராக இருந்த அது தண்காற்றுப்படுதலால் நுண்ணிய நீர்த்துளியாகி மீண்டும் மண்ணிடை மழையாய் வீழ்கின்றது. வெம்மைத் தொடக்கமும் தண்மை முடிவும் உடையது மழை என்பது கண்கூடு. இஃது இலக்கிய உலகமே அன்றி அறிவியல் உலகமும் அறுதியிட்டுரைக்கும் உண்மையாகும்

'மழைக்கருவுயிர்க்கும் அழல்' (10:143) என்று சுருக்கியுரைத்துப் பெருக்கமாகச் சிந்திக்கத் தூண்டுவார் அடிகள் கதிரோனால் எழுந்து படர்ந்த மேகம் 'மலைவெம்மையுள்ளது. அவ்வெம்மையை நீரால் தணிவிப்போம்' என்று கருதிச் செல்வது போன்றுளது என்று நயத்துடன் நவில்வார் **கம்பர்** (பால:28)

தண்மை, வெம்மையுடைய திங்கள், ஞாயிற்றைத் தனித்தனியே வாழ்த்திய அடிகள் அவ்விரண்டு தன்மைகளும் இணைந்ததாம் மழையினை அடுத்து வாழ்த்துதல் தகவுடையதாம்

அடிகளின் மழை வாழ்த்தினையும் புகார் வாழ்த்தினையும் நினையுந்தொறும் குறுந்தொகைப்பாடல் ஒன்று (40) நெஞ்சிடை முகிழ்த்து எழுதல் உண்டு முகிழ்த்தெழக் காரணம் என்ன எனின், இவற்றிடை அமைந்துள மாறா இணைப்புகளேயாம். அவ்வுயர்பாட்டு.

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"

என்பது இவ்வொள்ளிய பாடல். அன்புக்கலப்பினை, நீர் நிலக்கலப்புடன் இணைத்து விளக்கி நிற்றலை இனிதின் அறியலாம்.

தலைவன் தலைவியர் இருவரும் தாம் இன்னார் என அறிந்து கொண்டார் அல்லர். ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாமலே அன்பு மிகப் பெற்ற அவர்கள், பெற்றோர்களை அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. எனினும் இடைவெளி சிறிதுமின்றி அன்புச் செறிவு அமைந்துவிட்டது. எப்படி? செம்புலப்பெயல் நீர் போல ஒன்றுபட்டுவிட்டன உள்ளங்கள். வானிடைப் பரவிக்கிடந்த பெயல், செந்நிலத்திடை வீழ்ந்து அச்செந்நிலத்தின் நிறத்தைப் பெற்றுத் தனக்குரியதாம் நீர்மையுடன் 'செந்நீர்' ஆகின்றது. எங்கோ இருப்பது பெயல்; எங்கோ இருப்பது நிலம்; எனினும் இயற்கையாய் ஒன்றி இணைவு

பெற்றன—பிரிக்க முடியா இயைபு பெற்றன! அக்கலப்பு அன்புடை நெஞ்சக் கலப்புக்கு நிகராகின்றது. இத்தகைய மழையை, அன்புள்ளங்கள் ஒன்றுதலாம் திருமண வாழ்த்துப் பகுதியிலே போற்றுவது மிகப் பொருந்துவதாகின்றது. இனிச் செம்புலம் பண்படுத்தப்பட்ட நிலமாம்! உள்வாங்கி வளமாக்கல் உண்மையால்!

இவ்வாழ்த்தில் மண்ணினை முற்கூறி மழையினைப் பிற்கூறக் கூடாதோ எனின், படைப்பு முறைமையும் உண்மைக் கூறும் உற்று நோக்கிப் பார்க்கும் போது அடிகளின் முறைவைப்பு, தனிச்சிறப்பினதாதல் தெளிவாகும்.

ஐம்பூதங்களின்—(விண், வளி, தீ, நீர், நிலம்) தோற்றமுறைப்படி நிலத்திற்கு முன்னையது நீராம். இதனை "நெருப்பாகி நீர் பயந்தனை, நீராகி நிலம்படைத்தனை (பெருந்தொகை 125) என்பதும், "நிலத்திற்கு முன்னாகிய நீர்" என்பதும் (புறம் 9 உரை) "உருவறி வாரா ஊழியும், உந்து வளி ஊழியும், செந் தீ ஊழியும், தண்பெயல் ஊழியும், இருநிலத்து ஊழியும்" என்பதும் (*பரிபாடல் 2*) *நிலத்திற்கு முன்னையது நீர் என்பதைத் தெளிவுபடுத்தும்.* இப்படைப்பு முறையன்றி, இயல்முறையும் நீரை முன்னிறுத்திக் காட்டுதற்கே இடம் தருகின்றது.

"நீர் நெகிழ்தலைக் குணமாகவுடையது; நிலம் செறிதலைக் *குணமாகவுடையது*" (சிலம்பு 3–26 அடியார்) இவ்விரு தன்மைகளும் வாழ்வில் புகுவார்க்கு இன்றியமையாத் தன்மைகளாம். புதுவாழ்வில் புகுவார்க்கு வற்புறுத்திக் கூறத்தக்கவையும் ஆம். உள்ள நெகிழ்ச்சி அன்பு; உள்ளத்திண்மையாம் செறிவு கற்பு அன்பும் கற்பும் அமையா வாழ்வு வாழ்வாகாது வாழ்வில் பொதுவாக ஒன்றியிருக்க வேண்டிய நெகிழ்வையும், செறிவையும், எப்பொழுது உரைப்பது? வாழ்க்கைத் துவக்கத்தில் தானே!

"அன்பு—அருட்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம்" என்றார் ***பேராசிரியர்***. (தொல்—மெய்—12) "தான் வேண்டப்பட்ட பொருளின் கண் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி" என்றார் ***களவியல் உரைகாரர்***. (இறை—1) "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்றார் ***வள்ளுவர்***. களவியலோ 'அன்பின் ஐந்திணை' என்றே முதல் ஒலியை எழுப்புகின்றது

"உள்ள நெகிழ்வே அன்றிச் செறிவும் வேண்டும், ஒன்றுக்கு ஒன்று குறையா அளவில் வேண்டும்" என்று கருதும் அறநூல் வள்ளல், **பெண் கற்பென்னும் திண்மை** உண்டாகப் பெறவேண்டும் என்றும், தற்காத்தலும், தகை சான்ற சொற்காத்தலும் வேண்டும் என்றும் நிறை காக்கும் காப்புத் தேவை என்றும் பரக்கக் கூறுகின்றார்.

தொடர்ச்சி
அடுத்த இதழில்

இராமானுசரும் தமிழும்

பேராசிரியர் **ப.மருதநாயகம்,**
ஆய்வு அறிஞர்,
செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம்,
தரமணி, சென்னை–600 113
கைபேசி : 94427 87727
மின்னஞ்சல் · pmarudanayagam@yahoo com

சென்ற இதழின் தொடர்ச்சி :

பக்தி இயக்கம் தமிழகத்தின் தென் கோடியில் தாமிரபரணிக்கரையில் தோன்றி இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரவியது என்பது வரலாற்று உண்மை. இந்திய மொழிகள் பலவற்றிற்கும் பொதுவான பாடு பொருள்களாக வளர்ச்சி பெற்றவை முதன்முதலில் ஆழ்வார் பாடல்களில் முகிழ்த்தன. இறைவனின் படைப்பை அவன் திருவிளையாடலாகக் கருதலும், திருமாலின் அவதாரங்கள் பத்தெனப் பேசலும், கண்ணனின் குழந்தைப் பருவத்தைப் பலபடச் சீராட்டி மகிழ்தலும், இறைவனையும் அடியவரையும் காதலன் காதலியராகக் கற்பனை செய்து களிப்பதும் இத்தகைய பிறபலவும் தமிழிலியே பிறப்பெடுத்தன. கண்ணன் எனும் பாத்திரம் முல்லைநிலத் தெய்வமாக மாயோன், மால் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டது **பரிபாடலிலும் சிலப்பதிகாரத்திலும்** திருமாலின் திருவிளையாடல்கள் பரக்கப் பேசப்படுகின்றன. ஆழ்வார்களின் பாடல்களில் கண்ணன் தெய்வீகக் காதலனாக, பன்முகப்பாத்திரமாகத் தோற்றம் தருகிறான். இத்தமிழமரபே பத்தாம் நூற்றாண்டில் **பாகவத புராணத்தை**யும் அதன் மூலம் இந்திய மொழிகளின் பக்தி இலக்கியங்கள் பலவற்றையும் சென்றடைகின்றது. **பாகவத புராணத்தின் 48** ஆம் பாடல் பக்தி இயக்கம் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது

> பிருந்தாவனத்தில் வயது முதிர்ந்த இரண்டு பெண்களைக் கண்ட நாரதர் "நீங்கள் யார்" என்று கேட்க, அவர்களுள் ஒருத்தி, "என் பெயர் பக்தி ; இவள் பெயர் வைராக்கியம். நாங்கள் இருவரும் திராவிடத்தில் பிறந்து வளர்ந்தோம். அங்கே அழகும் இளமையும் உள்ளவர்களாக இருந்தோம். நாளடைவில் அங்கிருந்து கர்நாடகத்தில் புகுந்தோம். அங்கே எங்கள் இளமைக் கோலம் குறையத் தொடங்கியது. பிறகு கூர்நகரத்திற்கு வந்தோம். இங்கு இளமை முழுவதும் அழிந்து அழகு கெட்டு முதுமை தட்டிய நிலையில் உள்ளோம்." என்று சொன்னாள். **பதினெண் புராணங்கள் 245 – 46)**

பக்தி இயக்கத்தின் போது சங்க இலக்கிய மரபு பக்தி இலக்கியங்களுக்கேற்ப விரிவாக்கம் செய்யப் பெற்றது புதுப்பாடல் மரபுகளை முதலில் பரிபாடலும் பின்னால் ஆறாம் நூற்றாண்டில் முதல் மூன்றாழ்வார்களும் எட்டாம் நூற்றாண்டில் நம்மாழ்வாரும் திறம்படக் கையாண்டார்கள். பதின்மூன்றாம் நூற்றாண்டில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தமது **ஆச்சார்ய ஹிருதயம்** எனும் வைணவ சமய விளக்கப் பெரு நூலில் சங்க இலக்கிய அக மரபுகளைப் பயன்படுத்திக் கொள்கிறார். வைணவ

உரையாசிரியர்கள் தமிழே சிறந்த வழிபாட்டு மொழி என்பதை வற்புறுத்தத் தொடங்கினார்கள் என்பதற்கும் ஆவணச் சான்று உண்டு. **வைணவ ஆச்சாரியார்களின் மணிப்பிரவாள இலக்கியங்கள்** (The Manipravala Literatures of the Srivaisnava Acaryas, 12th to 15th Centuries) எனும் நூலில் மக்களிடையே பரவலாக வழங்கி வந்த கதையொன்று சொல்லப்படுகின்றது.

> இராமானுசரின் சீடர்களில் ஒருவரான வெங்கிபுரத்து நம்பி ஆயர்குலத்துப் பெண்களோடு சேர்ந்து நின்று திருமாலை வாழ்த்தி வணங்கிக் கொண்டிருந்தார். இதைக்கண்ட இன்னொரு சீடன் அவரை, "வைணவ பக்தர்களோடு சேராமல் இக்கல்வியறிவில்லாப் பெண்களோடு ஏன் நின்று கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டான். அதற்கு நம்பி, "*தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்திற்குப் பாய்வதைப் போல் இறைவனின்* அருள் இக்கல்வியறிவில்லா ஆயர்கள் மேல் பாய்கிறது" என்றார். அந்தச்சீடன் "அவர்கள் எவ்வாறு வழிபட்டார்கள், தாங்கள் எவ்வாறு வழிபட்டீர்கள் ?" என்று கேட்டான். நம்பி, " அவர்கள் தூய தமிழில் இறைவனை வேண்டினார்கள். 'அருள் கூர்ந்து இந்தப் பாலைக்குடி, இந்தப்பழத்தைச் சாப்பிடு; நூறாண்டுகள் வாழ்வாயாக; இந்தப் பட்டுத் துணியை மேலாடையாக அணிந்து கொள்" என்றெல்லாம் இறைவனைக் கேட்டுக் கொண்டார்கள். நான் சமஸ்கிருதத்தில் 'ஜெய விஜயீ பவ, ஜெய விஜயீ பவ' என்று சொன்னேன். அதற்கு அந்த மனிதன் "உம்மால் கரடுமுரடான உம்முடைய சமஸ்கிருதத்தை ஆயர்களுக்கிடையே இருக்கும் போது கூட மறக்கமுடியவில்லை. நாம் எங்கிருந்தாலும் *இப்படித்தான் இருப்போம் போலும் !"* என்று சொன்னான்.

ஆச்சார்ய ஹிருதயத்தில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் நம்மாழ்வார் பாடல்களின் அகப்புறப் பரிமாணங்களுக்குத் தனியிடம் அளித்து அவற்றைத் தம்முடைய தொடர் உருவக விளக்கங்களில் பயன்படுத்திக் கொள்கிறார். தலைவியின் முகம் திங்களுக்கு ஒப்பிடப்பட்டிருப்பதை ஆன்மாவின் தூய்மையை உருவகிப்பதாகவும் ஒரு மன்னன் தனது நாட்டை ஆள்வதைப் போலவே திருமால் உலகை ஆள்வதாகவும் அரசனின் ஐந்து பணிகள் திருமாலின் ஐந்து இயல்புகளை ஒத்தனவாகவும் பார்க்கப்படுகின்றன. அரசன் அரியணையிலிருந்து ஆட்சி செய்வது போல் இறைவன் விண்ணுலகமாகிய பரம பதத்திலிருந்து கோலோச்சுகிறான்.. இரவில் அரசன் மாறுவேடம் பூண்டு குடிகளைக் கண்காணிப்பது போல் இறைவன் உயிர்களில் எல்லாம் 'அந்தர் யாமியாக' அவர்களுக்கே தெரியாமல் மறைந்து உறைகிறான். குடிகளின் நலனை எவ்வாறு காப்பதென்று அரசன் அமைச்சரோடு கலந்துரையாடுவது போல் இறைவன் பாற்கடலில் அனந்தனாகிய பாம்பின் மேல் படுத்துத் தன் அடியார்களுக்கு நலம் சேர்ப்பது எவ்வாறென்று சிந்தனையில் ஆழ்கிறான். கொடிய விலங்குகளை அரசன் வேட்டையாடுவது போல் இறைவன் அவதாரங்களின் மேல் மண்ணுலகிற்கு வந்து அரக்கர்களை அழிக்கிறான். இன்பப் பூங்காக்களில் அரசன் ஓய்வெடுப்பது போல் இறைவனை காடுகளிலும் மலைகளிலும் உள்ள கோவில்களில் தங்கி மகிழ்கிறான். இவ்வாறு திருமாலின் 'பர', 'அந்தர்யாமின்', 'வியூக', 'அவதார', 'அர்ச்ச' இயல்புகள் மன்னனின் கடமைகளாக விளக்கப்படுகின்றன. சங்கச் செவ்விலக்கியத்திலிருந்து பக்தி இலக்கியம் உருமாற்றம் பெற்றது போலவே கவிதையிலிருந்து இறையியல் இங்கு உருமாற்றம் பெறுகிறது என்பது ஏ.கே. ராமானுஜன் தரும் அரிய விளக்கம் ஆகும்.

பள்ளியெழுச்சிப் பாடல் மரபு புறநானூற்றிலிருந்து மாணிக்க வாசகருக்கும் ஆண்டாளுக்கும் கிடைத்துப் பின் பிறமொழி இலக்கியங்களுக்குப் பரவியது கிள்ளிவளவனை எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்,

வெள்ளியும் இருவிசும்பு ஏர்தரும்; புள்ளும்
உயர்சினைக் குடம்பைக்குரல் தோற்றினவே;
பொய்கையும் போது கண்விழித்தன; பையச்
சுடரும் சுருங்கின்று; ஒளியே பாடு எழுந்து
இரங்கு நல்முரசமொடு வலம்புரி ஆர்ப்ப
இரவுப் புறங்கண்ட காலைத் தோன்றி (புறம் 397)

என்று பள்ளியெழுப்புவார். ஆண்டாளின் திருப்பாவையில் புறநானூற்றுப் பள்ளியெழுச்சிப் பாடல்களின் சொல்லாட்சியையும் பொருளையும் நினைவூட்டும் அடிகள் பலவற்றைக் காணலாம்.

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விரிசங்கின் பேரரவம் கேட்டிலையோ ?

கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ ?

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு
மேய்வான் பரந்தன காண்

வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண்

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீரவாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின காண்

வந்து எங்கும் கோழி அழைத்தனகாண், மாதவிப்
பந்தர்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவின காண்

அசாமிய மொழியில் கண்ணனைப் பள்ளியெழுப்பும் பாடல்கள் ஆண்டாளின் திருப்பாவையை அடியொற்றிச்செல்லும்.

கமலாவின் காதலனே, உன் காலைத்துயிலை நீக்குவாய்; உன் நிலவு போன்ற முகத்தை நான் பார்க்க வழி செய்வாய்; இரவு சென்று மறைந்து விட்டது; நான்கு திக்குகளும் தெளிவாய் உள்ளன; கதிரவனின் ஒளிக்கற்றைகள் இரவுத் திரையைக் கிழித்தெறிந்து தோற்றம் தருகின்றன நூறு இதழ்கள் கொண்ட தாமரைகள் மலர்ந்திருக்கக் கருவண்டுகள் அவற்றை வட்டமிடுகின்றன. பிரஜாவின் இடையர்குலக் கன்னிகள் உன் புகழைப் பாடிக் கொண்டே தயிர் கடைகின்றனர். தாமனும் சுதாமனும் உன்னை அழைக்கின்றனர். பலராமனும் படுக்கையறையிலிருந்து வெளியே வந்து விட்டதைப் பார். நந்தன் மாட்டுத்தொழுவத்திற்குக் கிளம்பி விட்டான் இடையர்கள் பசுக்களை நாடிச் சென்று விட்டனர். கோபாலா, துயிலெழுந்து பசுக்களைக் கூட்டிச் செல்வாய் உனது புல்லாங்குழலையும், கோலையும், வெண்ணெய், பால்

பானைகளையும் எடுத்துக்கொண்டு, கன்றுகளையும் கதறும் பசுக்களையும் கட்டவிழ்த்து விடுவாய். மாதவன் சொல்கிறான்: அன்னை யசோதையே, மூன்று உலகங்களுக்கும் நாயகனை மாடு மேய்க்கும் பையனாய்ப் பெற நீ என்ன தவம் செய்தாய் ?

தூது இலக்கிய மரபும் புறநானூற்றுப் பாடல்களிலிருந்தும், **நற்றிணை, அகநானூறு** ஆகிய அக இலக்கியங்களிலிருந்தும் ஆழ்வார் பாடல்களுக்குத் தொடர்வதைக் காணலாம். **நாச்சியார் திருமொழியில்** ஆண்டாள் குயில்பத்தில் குயிலைத்தூது அனுப்புகிறார்; வலம்புரிச் சங்கோடு பேசுகிறார்; மேகத்தைத்தூது அனுப்புகிறார்; காந்தள் மலரிடத்தும், கோவைக்கொடி, முல்லைக்கொடி, குயில்கள், மயில்கள், மழை, கடல் ஆகியவற்றிடமும் தம் ஆறாத்துயரைத் தெரிவிக்கிறார். இறுதிப்பகுதியிலே "கண்ணனைக் கண்டீர்களா, கண்ணனைக் கண்டீர்களா" என்ற கேள்வியும் அதற்குக் கண்டோர் சொல்லும் விடையுமாகப் பத்துப் பாடல்கள் வருகின்றன.

நம்மாழ்வார் இறைனை எல்லாமாகக் காண்கிறார்.

மூவுலகங்களுமாய், அல்லனாய், உகப்பாய், முனிவாய்
பூவில்வாழ் மகளாய், தவ்வையாய், புகழாய், பழியாய்,
தேவர் மேவித்தொழும் திருவிண்ணகர் சேர்ந்தபிரான்
பாவியேன் மனத்தே உறைகின்ற பரஞ்சுடரே (3478)

என்றெல்லாம் வாழ்த்தி, கவிபாடும் ஆற்றலைத் தமக்கு அளித்து, இறைவன் இனிய தமிழ்ப்பாசுரங்களைப் பெற்றுக் கொண்டான் என்று பாடுவார்.

என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை
இன்தமிழ் பாடிய ஈசனை ஆதியாய்
நின்ற என் சோதியை, என் சொல்லி நிற்பனோ ? (3649)

என் சொல்லால் யான் சொன்ன இன்கவி என்பித்து
தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன் (3650)

என்னால் தன்னை
வைகுந்தன் ஆகப்புகழ, வண்தீம்கவி
செய்குந்தன் தன்னை, எந்நாள் சிந்தித்து ஆர்வனோ ? (3655)

ஏர்விலா என்னைத் தன்னாக்கி என்னால் தன்னைச்
சீர்பெற இன்கவி சொன்ன திறத்துக்கே (3656)

மறப்பிலா என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை
உறப்பல இன்கவி சொன்ன உதவிக்கே ? (3657)

நம்மாழ்வார் தாம் பாடிய பாடல்களை இறைவனால் அவனைப்பற்றிப் பாடிக்கொண்ட பாடல்களாகப் பார்க்கிறார். தன்னை இறைவனோடு முற்றுமாக இணைத்துக் கொள்கிறார்; இதனால் நம்மாழ்வார் இறைவனையே தமிழாகக் காண்கிறார் என்று தெளிவுபடுத்துவார், ஏ.கே. ராமானுஜன்.

நம்மாழ்வாரைப் பொறுத்தமட்டில் இறைவன் மதகுருமார்களுக்கு உரிய இரண்டாம் மொழி அல்லன்; கட்டுப்பாடுகளையும் விலக்குகளையும், முன்மாதிரி அமைப்புகளையும் கற்று மனப்பாடம் செய்ய வேண்டிய

சமஸ்கிருத மொழி அல்லன். அவன் ஒவ்வொருவருக்கும் அவரது தாய்மொழி ஆவான். நம்மாழ்வார் பார்வையில் இறைவன் நம்முன்னே தாய்மொழியைப் போன்று வருகிறான் நாம் நம் தாய்மொழியில் வாழ்வதைப்போல் அவனிடத்து வாழ்கிறோம் அம்மொழியானது நமக்கு முன்பிருந்தது; நம் சமுதாயத்தில் நம்மைச் சுற்றியிருப்பது; நாம் மறைந்த பிறகும் அது வாழும். இத்தகைய முதல் மொழியை இழப்பதென்பது ஒருவருடைய தொடக்கத்தை, ஒழுகலாறுகளை இழப்பது போலாம்; மூளைக்கோளாறினால ஏற்படும் பேச்சிழபபிற்குத் தள்ளப்படுவது போலாம். இவ்வாறு நம்முடைய முன்னோர்களாகிய கவிமுனிவர்கள் தேவை கருதி ஒரு தாய்மொழிக் கவிதையையும் கவிதை இயலையும் படைத்தனர். அவர்களின் உன்முக நோக்கு, அரிதில் கற்கவேண்டிய, அரசவை மரபுக்குரிய, கவிதை இயலையோ, ஆடம்பரமான தன்னிடமிருந்து பிரிந்து நிற்கும் மொழியையோ ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. கவனமாகவும் கவலையோடும் கற்றறிந்து விவரிக்க வேண்டிய கலை, தன்னம்பிக்கையோடு கற்கமுடியாத கலை அவர்களுக்கு வேண்டாததாயிற்று. தாய்மொழியைப் போலல்லாது சமஸ்கிருதம் தந்தையரின் மொழியாகும்

ஓரிரண்டு **பரிபாடல்** பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள ஏ கே.ராமானுஜன் திருமாலைப்பற்றியும் முருகனைப்பற்றியும் உள்ள பரிபாடல்கள் இந்தியாவில் முதன்முதலில் எழுதப்பெற்ற பக்திக்கவிதைகள் என்றும் ஒரு தாய் மொழியில் முதலில் தோற்றம் பெற்ற சமயக்கவிதைகள் என்றும் கீரந்தையார் எழுதிய பரிபாடல் இந்தியாவில் திருமால் பற்றியெழுந்த முதல் பக்திக் கவிதையென்றும் கூறுவார்.

கடுவன் இளவெயினனார் பாடிய மூன்றாம் பரிபாடல் திருமாலை,

> தீயினுள் தெறல் நீ ! பூவினுள் நாற்றம் நீ !
> கல்லினுள் மணியும் நீ ! சொல்லினுள் வாய்மை நீ !
> அறத்தினுள் அன்பு நீ ! மறத்தினுள் மைந்து நீ !
> வேதத்து மறை நீ ! பூதத்துமுதலும் நீ !
> வெஞ்சுடர் ஒளியும் நீ ! திங்களுள் அளியும் நீ !
> அனைத்தும் நீ ! அனைத்தின் உட்பொருளும் நீ ! ஆதலின்
> உறைவும் உறைவதும் இலையே உண்மையும்
> மறவியல் சிறப்பின் மாயமார் அனையை !
> முதல்முறை இடைமுறை கடைமுறை தொழிலில்
> பிறவாப் பிறப்பிலை ! பிறப்பித்தோர் இலையே ! (63–72)

எல்லாப் பொருள்களின் சாரமாக, உள்ளியல்பாக இறைவன் உள்ளான் என்னும் இக்கருத்து பின்னால் வந்த ஆழவார்கள், நாயன்மார்கள் பாடல்களில் இடம் பெறுவதையும் **பகவத்கீதை** கூறும் இறைத்தத்துவம் இத்தகைய மொழியிலேயே அமைந்திருப்பதையும் நாம் அறிவோம் திருமாலைப் பற்றிய நான்காம் பரிபாடல்

> நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள;
> நின் தண்மையும் சாயலும் திங்களுள;
> நின் காத்தலும் வண்மையும் மாரியுள;
> நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள;
> நின் நாற்றமும் ஒண்மையும் பூவையுள;

நின் தோற்றமும் அகலமும் நீரிலுள;
நின் உருவமும் ஒலியும் ஆகாயத்துள;
நின் வருதலும் ஒடுக்கமும் மருத்தினுள;
அதனால் இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏமமார்ந்த நிற்பிரிந்து (25 – 35)

என்னும் அடிகளில் அனைத்துப் பொருள்களும் இறைவனிடத்திலிருந்து தோன்றி மீண்டும் அவனையே சென்றடைவன என்றும் அவனே பலவாகவும் தோன்றி அவற்றைக் கடந்தும் நிற்பவன் என்றும் வலியுறுத்தும் இப்பாடற் கருத்தாலும் 'இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்' என்ற தொடராலும் கவரப்பட்ட நம்மாழ்வார்,

இவையும் அவையும் உவையும்
இவரும் அவரும் உவரும்
எவையும் எவரும் தன்னுள்ளே
ஆகியும் ஆக்கியும் காக்கும்

என்றும்

நாம் அவன் இவன் உவன்
அவள் இவள் உவள் எவள்
தாம் அவர் இவர் உவர்
அது இது உது எது
வீம் அவை இவை உவை
அவை நலம் தீங்கு அவை
ஆம் அவை ஆய் அவை
ஆய் நின்ற அவரே (2085)

என்றும் திருமாலைப் பரவுவார்

பதினைந்தாம் பரிபாடலில் புலவர் இளம்பெருவழுதியார் திருமாலிருஞ்சோலையை 'நினைமின்' என்றும்,

தையலவரொடும் தந்தாரவரொடும்
கைம் மகவோடும் காதலர் அவரொடும்
தெய்வம் பேணித் திசை தொழுதினிர் சென்மின் (46 – 48)

என்றும் அறிவுறுத்துவார். நம்மாழவார் இதனை மனத்தில் கொண்டு "திருமாலிருஞ்சோலைமலை என்றேன்; என்னைத் திருமால் வந்து என் நெஞ்சுநிறையப் புகுந்தான்" **(351)**, "தென்னன் திருமாலிருஞ்சோலைத் திசை கைகூப்பிச் சேர்ந்த யான் இன்னும் போவேனே கொலோ" **(3142)** என்பார் பதினேழாம்பரிபாடலில் நல்லழிசியார், மனிதரைப் பணிவுடைய மொழியால் பாடுதலை நீக்கி, முருகனின் குன்றத்தைப்பாடி இன்பம் பெறுவோம் என்பார் நம்மாழ்வார்,

என்னாவது எத்தனை நாளைக்குப் போவதும் புலவீர்காள்
மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள் (2395)

என்றும்

மாரியனைய கை மால்வரை ஒக்கும் திண் தோளென்று
பாரிலோர் பற்றையப் பச்சைப் பசும் பொய்கள் பேசவே (2398)

என்றும் விளக்கமாக எடுத்துச் சொல்வார்

தொடர்ச்சி அடுத்த இதழில்

ஆய் ஈற்று வினைப்பகுதிகள்

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி–605 008
கைபேசி : 94431 51044

1.0 ஐகாரவீற்று வினைப்பகுதிகள் :

ஐகாரவீற்று வினையடிகள் பழந்தமிழில் இகரத்தையும் தகரமெய்யையும் இறந்தகால விகுதிகளை ஏற்கும் திறத்தனவாகக் காணப்படுகின்றன. எ–டு

1. 1) சிதைஇ(நற்.378.9) சிதைஇய (குறு 349.1)
   2) சிதைத்து 9அகம்.27.14): சிதைந்து (பதி.67.17)
2. 1) புனைஇ (நற்.313 4)
   2) புனைந்து (அகம் 136.6)
3. 1) சினைஇ (அகம்.366 7, ஐங்.455. கலி.90.15, நற்.247.1, புறம்.71
   2) சினைஇய (அகம்.37.7. ஐங்.248.2, கலி.149.14, பத்துப் 8.229, பரி1.6) சினைஇயோர் (புறம்.41 18)
   3) கோமகள் சினந்தென (நற்.300.1) 'கோ மகள் சினந்தாளாக'

தமிழ் நெடுங்கணக்கில் ஐகார ஔகாரங்கள் நெடிலாக இடம் பெற்றிருந்தாலும் அவற்றை உயிரொலியன்களாக ஏற்பதற்கில்லை. ஏனெனில் அவையிரண்டும் அய், அவ் ஆகியவற்றை உணர்த்தும் குறியீடுகளேயாகும். எனவே ஐகாரவீற்று வினையடிகளும், பெயர்நிலைக் கிளவிகளும் *அய்* ஈற்றனவாகவே கொள்ளத்தக்கனவாகும். ஐகாரவீற்று வினையடிகள் பழந்தமிழில் ஆய் ஈற்றனவாகவும் நிகழ்கின்றன எ.டு *கடாய்* 'கடவு', *வினாய்* 'வினவு', *விராய்* 'விரவு', *பராய்* 'பரவு'. வினாயினன் (கலி.68.16) என்ற வினைமுற்று *வினாய்* என்னும் பகுதியினதாகும்.

2.0 ஆய் ஈற்று வினைப்பகுதிகள் :

ஆய் ஈற்று வினைவடிவங்களாகிய *கடாய், துழாய், வினாய், விராய், பராய்* ஆகியவை வினையடிகளாயினும் பழந்தமிழில் இவை இறந்தகால வினையெச்சங்களாகவும், இறந்தகாலப் பகுதிகளாகவும் (Past Bases) நிகழ்கின்றன

எ.டு

4) 1) கடாஅய் (அகம்.256.18, பதி 30.33) 'கடாவி'
   2) கடாஅய (கலி.112.5) 'கடாவிய'
   3) கடாஅயார் (கலி.112.8) 'கடாவியோர்'

5) 1) வினாய் (கலி.77.19 பத்துப் 8 4), வினாஅய் (அகம்.82.12) 'வினாவி'
   2) வினாய (கலி,108.23) 'வினாவிய'
   3) வினாயினன் (கலி.68.16), 'வினாவினன்'

6) 1) விராஅய்(தொல்.பொ.பேரா365, அகம்.99.8, புறம் 24.15) 'விராவி'

2) விராய(பதி.42.10, புறம்.370.24, தொல்.பொ.பேரா.373 உரை)

விராய(தொல் பொ பேரா 373, பத்துப் 9.68) 'விராவிய'

7) 1) பராஅய் (கலி 101.14) 'பராவி'

2) பராஅய (அகம் 266.2) 'பராவிய'

இந்த எடுத்துக்காட்டுக்களில் சிலவற்றுள் ஆகாரத்தையடுத்து நிகழும் அகரக்குறில் அளபெடுத்த இனக்குறிலாகும். எனவே இதனை இலக்கண உருபனாகக் கொள்ள முடியாது.

3.0 இறந்தகாலம் புணர்ந்து கெடுதல் :

வினைப் பகுதிகளாக இனங்காணப்படும் *கடாய், வினாய், விராய், பராய்* ஆகியவை இறந்தகால வினையெச்சங்களாகவும், இறந்தகாலப் பகுதிகளாகவும் நிகழ்வது எங்ஙனம்? *இகர யகரம் இறுதி விரவும்* (எழுத்து.இளம் 58) என்ற தொல்காப்பிய நூற்பாவைக் கருத்தில் கொண்டு கடாய் என்பது எடுத்துக் காட்டாக, *கடாஇ* என்பதன் உறழ்ச்சியாகக் கருத முடியாது. *கடாய், வினாய், விராய், பராய்* ஆகியவற்றில் நிகழும் ஈற்று யகரமெய்யானது வண்ணனை ஆய்வில் வினைப்பகுதியின் ஒருங்கிணைந்த உறுப்பாகக் கொள்ளத்தக்கதாகும். *கடாய், வினாய்,* முதலான வினைப்பகுதிகளையடுத்து இறந்தகால இகரக் கிளவு புணர்ந்து கெட்டது என்பதே உண்மை இது *போய், மூய், மேய், 'பொருந்து', விதாய் பரவு* முதலான வினையடிகளின் மீது அமைந்த வினையெச்சங்களுக்கும் பொருந்தும். இதனைக் கருத்தில் கொண்டு எடுத்துக்காட்டாக வினாய், போய் ஆகிய வினையெச்சங்களின் அமைப்பு *வினாய்*+ϕ, *போய்*+ϕ எனவும் வினாய, போய ஆகிய பெயரெச்சங்களின் அமைப்பு *வினாய்*–ϕ+அ, *போய்*–ϕ+அ எனவும் ஆராயப்படும். இந்த ஆய்வில் ϕ என்ற குறியீடு புணர்ச்சிக்கேட்டினைக் குறிக்கும் அருவக்கிளவியாகும். புணர்ச்சிக்கேடு எழுத்தியல் அடிப்படையில் நிகழ்வதாகும். **வினாயி *போயி* ஆகியவற்றில் யகரமெய்யும் அதனைத் தொடர்ந்து நிகழும் இகரவுயிரும் முன்னண்ண இனவொலிகளாகும் இதனால்தான் *வினாயி, **போயி* ஆகியவற்றின் ஈற்றில் நிகழும் இகரம் கெடுகிறது இத்தகைய கேட்டினையே புணர்ச்சிக்கேடு என்று குறிக்கப்படுகிறது. எனவே *வினாய், போய்* ஆகியவற்றை வினைப் பகுதிகளாகத் தான் கொள்ள முடியுமே தவிர வினையெச்சங்களாகக் கொள்ள முடியாது

4.0 வினவும் வினாவும்—தோற்றமும் வளர்ச்சியும் :

4.1 *கடவு, வினவு, விரவு, பரவு* (=வழிபடு) ஆகிய வினைப்பகுதிகள் முறையே கடய் (=கடை), வினய் (=வினை), விரய்(=விரை), பரய் (=பரை) ஆகியவற்றின் அடியாகத் தோன்றியவையாகும். இதே போல் *கடாவு, வினாவு, விராவு, பராவு* ஆகிய வினைப்பகுதிகள் முறையே கடாய், வினாய், விராய், பராய் ஆகியவற்றின் அடியாகத் தோன்றியவையாகும் இத்தகைய வினைப் பகுதிகளின் தோற்றம் வரலாற்று நிகழ்வுகளாகும். இதனை எடுத்துக் காட்டாக வினவு, வினாவு ஆகியவற்றின் தோற்றத்தை விளக்குவதன் வாயிலாகப் புலப்படுத்தலாம் *வினவு, வினாவு* ஆகியவற்றின் ஈற்றில் நிகழும் உகரம் புணர்ச்சியில் உயிர்முன் கெடும் இயல்பினதாகையால் இதனை வெற்றொலியாகக் கொள்ளலாம் இதனைக் கருத்தில் கொண்டு *வினவு, வினாவு* ஆகியவற்றின் முதன்மை வடிவங்கள் முறையே **வினவ், வினாவ்* என்று குறிக்கப்படும் இவற்றில் நிகழும் ஈற்று வகரமெய் மகரமெய்யின் திரிபாகும் இதனின்றும் **வினவ், *வினாவ்* இரண்டும்

**வினம், *வினாம்* ஆகியவற்றின் திரிபென்பது பெறப்படும். **வினவ், *வினாவ்* ஆகியவற்றின் தோற்றம் ஒன்றுக்கு மேற்பட்ட படிநிலை மாற்றங்களைக் கொண்டவையாகும் இந்த மாற்றங்கள் அனைத்தும் எழுத்தியல் சார்ந்தவையாகும். படிநிலை மாற்றங்களின் இறுதி நிலையில் அமைபவையே **வினம், *வினாம்* ஆகியவை. இவற்றின் ஈற்றயல் படிநிலை வடிவங்கள் முறையே **வினய்ம், *வினாய்ம்,* என்பனவாகும். இந்த வடிவங்களில் வினய் (=வினை), வினாய் ஆகிய முதன்மை வினைப்பகுதிகளின் நிகழ்ச்சியைக் காணலாம். **வினய்ம், *வினாய்ம்* ஆகியவற்றின் ஈற்றயல் படிநிலை வடிவங்கள் **வினயும்* **வினாயும்* என்பவையாகும்.

4.2 **வினயும், *வினாயும்* ஆகியவை *வினவு, வினாவு* ஆகியவற்றின் அடிநிலை வடிவங்களாகும். இந்த வடிவங்கள் முன்னிலை ஒருமை குறிக்கும் ஏவற்பண்பினவாகும். தெலுங்கில் சேயுமு(=செயும்–)வாய்பாட்டினவாகிய தினுமு (=தின்), செப்புமு (=செப்பு), பாடுமு (=பாடு) முதலானவை முன்னிலை ஏவல் ஒருமை வினைகளாக நிகழ்தல் இங்கே கருத்தில் கொள்ளத்தக்கதாகும். **வினயும், *வினாயும்* ஆகியவை ஈற்றயல் உகரம் கெட்டு **வினய்ம், *வினாய்ம்* என்ற செய்ம் வாய்பாட்டு வினை வடிவாகின்றன. பழந்தமிழில் செய்ம் வாய்பாட்டு வினைப் பகுதிகளின் நிகழ்ச்சியைச் செய்மின் (<*செய்ம்+இன்), செய்மதி (<*செய்ம்+அதி), செய்மோ (<*செய்ம்+ஒ) ஆகிய வாய்பாட்டு முன்னிலை ஏவல் வினைகளில் காணலாம். எ.டு. உண்மின் (பதி.18–1) (<*உண்ம்+இன்) 'உண்ணுங்கள்', காண்மதி (ஐங் 140 1) (<*காண்ம்+அதி) 'காண்பாயாக', *விளைமோ* (நற் 251.11) (<**விளைம்+ஒ*) '*விளைவாயாக*. தொல்காப்பியர் (சொல்.சேனா.274) இவற்றைச் செய்–மின், செய்–மதி, செய்–மோ என்ற அமைப்பினதாகக் கொண்டு மின், மதி, மோ ஆகியவற்றை முன்னிலை அசைச்சொற் கிளவிகளாகக் கருதுவார். இது பிறழாய்வின் பாற்படும். இத்தகைய ஆய்வு வரலாற்று உண்மைகளை மறைத்துவிடுகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு (*வினய்ம் (=வினைம்) என்ற வினைப்பகுதியின் அடியாக **வினைமின்* 'வினவுங்கள்' 'வினைமதி' *வினைமோ 'வினவுவாயாக' ஆகிய முன்னிலை ஏவல் வினைகளைப் படைத்துக் கொள்ள முடியும் **வினய்ம்* என்பதன் அடிநிலை வடிவமாகிய **வினயும்* என்பது தெலுங்கில் *வினுமு* என்று நிகழ்கிறது இதனின்றும் செயும் (=செய்யும்) வாய்பாட்டு ஒருமை ஏவல் வினைகள் தமிழும் தெலுங்கும் தனிமொழிகளாக இனங்காணப்படுவதற்கு முன்பே தொன்மொழியில் நிலைகொண்டு விட்டன என்பது புலனாகின்றது

4.3 ஈற்றயல் உகரக்கேட்டினைத் தொடர்ந்து தோற்றம் கொண்ட **வினய்ம்* **வினாய்ம்* ஆகிய வினைவடிவங்கள் அடுத்த படிநிலை வளர்ச்சியாக யகரம் கெட்டு **வினம், *வினாம்* என்று அமைகின்றன. இவற்றில் நிகழும் ஈற்று மகரமெய் அடுத்த படிநிலை வளர்ச்சியாக வகரமாகத் திரிந்து **வினவ் *வினாவ்* ஆகிய வடிவங்கள் தோற்றம் கொள்கின்றன இந்தத் திரிபு உகரச் சாரியையாகிய வெற்றொலியின் முன் நிகழ்வதாகக் கருதலாம். அதாவது **வினம்–உ, *வினாம்–* உ ஆகிய வடிவங்களில் சாரியை அல்லது ஒலித்துணை உகரத்தின் நிகழ்ச்சியானது உயிரிடை மகரம் வகரமாகத் திரிவதற்கு உந்து சக்தியாக அமைகிறது. இந்தத் திரிபானது அரைமாத்திரை அளவினதாகிய மகரமெய் கால் மாத்திரையாகக் குறுகி வலுவிழக்கும் போது நிகழ்வதாகத் துணியலாம். மேலும் இத்தகைய திரிபானது மொழி வரலாற்றில் ஒரு தொடர் நிகழ்ச்சியன்று. ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் இந்தத் திரிபு நிகழ்ந்து முடிந்து விடுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, *மறம், முடம், குறம், புலம், புனம், கயம், மடம், *உழம்* முதலானவற்றில் ஈற்று மகரம் அன், அர் ஆகிய உயிர்முதல் விகுதிகளின் முன்

வகரமாகத் திரிவதைக் குறிப்பிடலாம்.எ.டு. *மறவன், முடவன், குறவர், புலவர், புனவன், கயவன், மடவன், உழவன், களமர்* (<களம்+அர்) என்பது மேற்படி திரிபு நிகழ்ந்து முடிந்த பிறகு தோன்றியதாகவோ இந்தத் திரிபிற்கு இலக்காகாத கிளைமொழி வழக்காகவோ கருதற்பாலதாகும்

5.0 சினமும் சினவும் :

5 1 சினம், சினவு ஆகியவை **வினம், *வினவு* ஆகியவற்றைப்போல் தோன்றியமைந்தவையாகும். இவை *சினை* என்னும் வினையடியாகத் தோன்றியவையாகும். இந்த வினையினடியாகத் தோன்றி நிகழும் வினைத் திரிபு வடிவங்களைப் பழந்தமிழில் காணலாம் கருதுக சினைஇ (அகம்.366 7, ஐங் 455 1, கலி 90.15, நற்.247.1, புறம் 71.1) 'சினந்து', சினைஇய (அகம்.37.7, ஐங் 248 2, கலி, 149 14, பத்துப்.8.229, பதி 1 6) 'சினந்த', சினைஇயோர் (புறம் 41 18) 'சினந்தோர், சினவு என்னும் வினையடியாகத் தோன்றி நிகழும் வினைவடிவங்களும் பழந்தமிழில் பதிவாகியுள்ளன கருதுக' சினவுவாய் (கலி.87.3), சினவுவென் (ஐங்.118.3), சினவுவது (கலி.91 6), சினவாது (நற் 100 6), சினவாய் (பதி 32.71), சினவல் (குறு 362.2) சினவிய (நற் 100 6).

5.2 துழவு, துழாவு ஆகிய வினையடிகளின் தோற்றமும் வினவு, வினாவு ஆகியவற்றைப் போன்றதேயாகும் இவை துழய் (=துழை), *துழாய் ஆகியவற்றின் அடியாகத் தோன்றியவையாகும் பழந்தமிழில் துழை என்பதனடியாகத் தோன்றிய இகரவீற்று வினையெச்சத்தின் நிகழ்ச்சியைக் காணலாம். கருதுக: துழைஇ (<துழை/துழய்+இ) (அகம்.80.5, நற்.70.4, பதி,30.3, புறம் 370 4, பத்துப்.10.181) '*துழவி*', *துழாய்* என்பதன் நிகழ்ச்சியானது பழந்தமிழில் காணப்படவில்லை ஆயினும் வினாவு என்பது வினாய் என்பதன் அடியாகத் தோன்றியதாகலின் *துழாவு* என்பதும் **துழாய்* என்பதன் அடியாகத் தோன்றியதாகக் கொள்ளுதல் தகும்.

5 3 ஓர் இடைபிறவரலாகத் தமிழில் நிகழும் அகரவீற்று வினைப் பகுதிகளின் தோற்றம் பற்றியும் இங்கே குறிப்பிடவேண்டும். துழவி என்ற பொருளில் துழந்து (குறு 167 4) என்ற வினையமைப்பின் நிகழ்ச்சி பழந்தமிழில் காணப்படுகிறது. இதன் வினைப்பகுதி துழ என்பதாகும். இந்த வினைப்பகுதி துழய் என்பதன் திரிபாகும் இதனடியாகத் தோன்றிய **துழய்ந்து* (<துழய்+ந்து) என்ற செய்து வாய்பாட்டு வினைவடிவம் ஒரு படிநிலை மாற்றமாக யகரத்தை இழந்து *துழந்து* எனத்திரிந்தது. இவ்வாறு திரிந்த வினையமைப்பில் துழ என்பது வினையடியாக இனங் காணப்பட்டது. தமிழில் காணப்படும் *நட, பற, உழ, அள, அல, கல, இற, சின, மண, வல* முதலான பல வினைப்பகுதிகள் *துழ* என்பதைப்போல் தோன்றியமைந்தவையாகும்.

5.4 வினாய் என்பது இகரம் புணர்ந்து கெட்ட வினையெச்சமாக நிகழ்வதைப் போலவே இடைக்காலத் தமிழிலும் இத்தகைய வினையெச்ச வடிவங்களின் நிகழ்ச்சி காணப்படுகின்றது. பெருங்கதை (பெ.க) சீவகசிந்தாமணி (சீ.சி.) ஆகிய காப்பியங்களில் *வினாய்* போன்ற வினையெச்சங்களின் நிகழச்சி பதிவாகியுள்ளதைப் பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் புலப்படுத்தும்

8 1) கடாஅய் (பெ க 1 54.113) (=கடைஇ) 'கடாவி/செலுத்தி'
2) குலாஅய்(பெ.க 1.41.77) (=குலைஇ) 'வளைந்து'
3) கலாஅய் (பெ க.2.4 83) (=கலைஇ) 'கலந்து'
4) உராஅய் (பெ க 2 15 33) (=உரைஇ) 'பரந்து'
5) உலாஅய் (பெ.க 2.15 84) (=உலைஇ) 'உலாவி'

6) நடாஅய் (பெ.க.4.10.55) (=நடைஇ) 'நடத்தி'

7) உசாஅய் (பெ.க.5.1213) (=*உசைஇ) 'உசாவி'

இந்த எடுத்துக்காட்டுகளில் நெடிலையடுத்து நிகழும் அகர இனக்குறில் அளபெடுத்த குறிலாகும். யாப்பமைதி கருதிய இந்தக் குறிலுக்கு மொழியியற் சிறப்பேதுமில்லை

9. 1) குலாய் (சீ.சி.2443) (=குலைஇ) 'குலாவி'

2) கவாய் (சீ.சி.2444) (=கவைஇ) 'கவவி/கவ்வி'

3) உராய் (சீ.சி.1955) (=உரைஇ) 'பரவி, பரந்து'

4) உலாய் (சீ.சி 1903) (=உலைஇ) 'பரந்து'

இந்த எடுத்துக்காட்டுகளில் இறந்தகால விகுதி அருவக் கிளவியாக நிகழ்கிறது.

6.0. திறவும் கரவும் :

6.1 வினவு என்ற சொல்லின் தோற்றம் தொடர்பான ஆய்வானது அறிவு, நிறுவு, இழவு, தினவு, மறவு (கருதுக' மறவற்க), துறவு (கருதுக. துறவற்க), கரவு (கருதுக கரவாமை), திறவு (கருதுக' திறவாய்) முதலான தமிழ்ச் சொற்களுக்கும் பிடுவு (=பிழி), துடுவு (=துடை), தெறுவு (<தெறவு) 'திற' முதலான தெலுங்குச் சொற்களுக்கும் பொருந்தும் எடுத்துக்காட்டாகத் தினவு (தமிழ்), பிடுவு (தெலுங்கு) ஆகிய சொற்களின் இடைநிலை வடிவங்கள் **தினம்–உ*, **பிழிம்–உ* என இனங்காணப்படும் அடிநிலை வடிவங்களினின்றும் இவை தோன்றியமைதல் தொடர்பான ஆய்வு இங்கே மேற் கொள்ளப்படவில்லை.

6.2 இந்தச் சிற்றாய்வினின்றும் பெறப்படும் சில உண்மைகளை இங்கே குறிப்பிட்டாக வேண்டும் வினவு, கடவு, விரவு முதலான தமிழ்வினையடிகளின் தோற்றமும் பிடுவு (=பிழி), துடுவு (=துடை), மறுவு (=மற) முதலான தெலுங்கு வினையடிகளின் தோற்றமும் தமிழும் தெலுங்கும் தனிமொழிகளாக இனங்காணப்படுவதற்கு முன்பே நிகழ்ந்தவையாகும். ஏனெனில் இரண்டு மொழிகளிலும் காணப்படும் மேற்படி வினையடிகளின் படிநிலை வளர்ச்சி ஒரே தன்மையதாகும் மேலே குறிக்கப்பெற்றுள்ள தமிழ், தெலுங்கு வினையடிகளெல்லாம் *வினம் (<வினய்ம்), *கடம் (<*கடய்ம்) *விரம் (<விரய்ம்) *பிழிம் (<*பிழிய்ம்), *துடம் (<துடய்ம்), *மறம்(<மறய்ம்) ஆகியவற்றோடு படிநிலைத் தொடர்புடையனவாகும்

6.3 ஐகாரம் என்பது ஓர் ஒலியனாகத் தமிழ் நெடுங்கணக்கில் இடம் பெறத்தக்க உயிரொலியன் அன்று. ஐ என்பதன் நெடில் வடிவம் ஆய் (எ–டு. விரய்=விரை)/விராய் என்பதால் அய் என்பதன் குறியீடாகவே ஐ என்ற வரிவடிவைக் கொளள வேண்டும். எனவே ஐ என்பதை இரண்டு மாத்திரை அளவுள்ள நெடிலாகக் கொள்வதற்குத் தமிழில் வாய்ப்பே இல்லை. இந்த நிலையில் மரபிலக்கணிகள் வலிந்து போற்றும் ஐகாரக் குறுக்கம் பற்றிய நிலைப்பாடானது முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டியதாகும்.

பிற்சேர்க்கை

செயும் வாய்பாட்டு வினைப்பகுதிகள் தெலுங்கில் செயுன் வாய்பாட்டினவாகத் திரிந்து பின்னர் ஈற்று னகரத்தையும் இழந்து விடுகின்றன. நலியு 'நலி', கலியு 'கலை', புலியு 'புலி' முதலான தெலுங்கு வினைப் பகுதிகள் இவ்வாறு தோன்றியவையாகும் செயும் வாய்பாட்டு வினைகளின் ஈற்று மகரம் கால் மாத்திரையாகக் குறுகி உகரச் சாரியையின் முன் செய்வ் வாய்பாட்டு வினைப்பகுதிகளாகத் துளு மொழியில் நிகழ்கின்றன

எ–டு.

DED	தமிழ்	துளு
193	அரை	அரெவுனி (<அரெவ்+உனி)
253	அள	அளவுனி (<அளவ்+உனி)
799	ஒடி	உடெவுனி (<உடெவ்+உனி)
832	ஒலி	உலெவுனி (<உலெவ்+உனி), ஒலியு (தெலுங்கு)
945	கடி	கடெவுனி (<கடெவ்+உனி)
957	கடை	கடவுனி (<கடவ்+உனி)

ஏற்று, ஆற்று, காய்ச்சு, கூட்டு, ஆட்டு ஆகிய வினைகள் துளுவில் *ஏறாவுனி, ஆஜாவுனி, காயாவுனி, கூடாவுனி, ஆடாவுனி* என்று அமைகின்றன. இந்த வினைகள் *கடாவு, வினாவு, விராவு, பராவு* ஆகிய தமிழ் வினைகள் *கடாய், வினாய், விராய், பராய்* ஆகியவற்றின் மீது தோன்றியதைப் போல் **ஏறாய், *ஆறாய், *காயாய், *கூடாய், *ஆடாய்* ஆகியவற்றின் மீது தோன்றியவையா என்பது ஆய்வுக்குரியதாகும். ஏறாவுனி, காயாவுனி, கூடாவுனி, ஆடாவுனி ஆகியவற்றில் நிகழும் ஆவுனி, (<*ஆவுன்+இ<*ஆவும்–) என்பது ஆகு என்ற வினையின் திரிபாகத் தோன்றுகிறது. இது உண்மையெனில் ஆகு என்பது ஆவு எனத் திரிந்து இலக்கண உருபனாகத் துளுவில் நிகழ்வதாகக் கருதலாம் இந்த உருபன் செயப்படுபொருள் குன்றாவினை உருபனாகக் கொள்ளத் தக்கதாகும். இதன் அடிப்படையில் தமிழில் *வினாய், கடாய், விராய், பராய்* ஆகியவற்றில் நிகழும் *ஆய்* என்பதை வரலாற்று நிலையில் ஆகு என்ற வினையோடு தொடர்புடையதாகக் கருதலாம். *ஆய்* என்பதையும் *வினை, கடை, சினை, விரை, பரை* ஆகியவற்றில் நிகழும் ஐ (=அய்) என்பதையும் வரலாற்று நிலையில் *ஆகு* என்ற வினையோடு தொடர்புடையனவாகக் கருதலாம் தமிழில் பரை, பராய் ஆகியவற்றில் நிகழும் –ஐ (=அய்), –ஆய் ஆகியவற்றின் இலக்கணச் செயற்பாடு ஆய்வுக்குரியதாகும்.

சுருக்க விளக்கம்

அகம்	–	அகநானூறு	இளம்	–	இளம்பூரணம்
எழுத்து	–	எழுத்ததிகாரம்	ஐங்	–	ஐங்குறுநூறு
கலி	–	கலித்தொகை	குறு	–	குறுந்தொகை
சேனா	–	சேனாவரையம்	சொல்	–	சொல்லதிகாரம்
தொல்	–	தொல்காப்பியம்	நற்	–	நற்றிணை
பத்துப்	–	பத்துப்பாட்டு	பதி	–	பதிற்றுப்பத்து
புறம்	–	புறநானூறு	பொ	–	பொருளதிகாரம்
பே	–	பேராசிரியம்			
DED	-	Dravidian Etymological Dictionary			

+++

சங்கத் தமிழன் பயன்பாட்டில் நாணயம் (காசு)

முனைவர் **பு.இந்திராகாந்தி,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை குந்தவைநாச்சியார்,
அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்
கைபேசி : 97510 04362

மண்ணியல் அறிவு நுட்பத்தால் தமிழர்கள் நிலத்தை அதன் தன்மைக்கு ஏற்பப் பிரித்து வளமை கண்டனர் அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பெயரிட்டு வழங்கப்பட்டன மண் தன்மைக்கேற்ப அதன் உற்பத்தித் திறனை பெருக்கினர். இதனால் நிலத்தின் தன்மைக்கேற்ப பொருள்கள் உற்பத்தியாயின இதனடிப்படையில் நாகரிகமும் பண்பாடும் வளம் பெற்று வளர்ந்தன. தமிழர்கள் அன்றாட உணவுத் தேவைகளான அரிசி, பருப்பு, உப்பு, பால் தயிர், மீன், இறைச்சி போன்றவற்றை காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்றுச் செய்து கொண்டனர் இவற்றில் சில பொருள்கள் சமீபகாலம் வரை பண்டமாற்று முறையில் இருந்தது. இப்பொழுது இம்முறைகள் எல்லாம் பல்பொருள் வணிக வளாகங்களுக்குள்ளும், பெரும் முதலாளிகளுக்குள்ளும் அடங்கிப் போய்விட்டன.

உப்புவண்டியும், மிளகாய்வண்டியும், கிழங்குவண்டியும், புளிவண்டியும், பருப்பு வண்டியும் கடந்து சென்ற தெருக்கள் தற்போது நெகிழிக் குப்பைகளால் அருவருப்பாய் காட்சியளிக்கின்றன. சுற்றுச்சூழல் மாசில்லாமல் வண்டிக்குள் வந்த பொருட்கள், இன்று பதப்படுத்தப்பட்டு நெகிழி பைக்குள் அடைபட்டுப் போனது மிகப்பெரும் துயரமே. இதனால் வாய்க்குள் நுழைய முடியாத வியாதியோடு பல மனிதர்கள் வீதியிலும், வீட்டிலுமாக உள்ளனர்.

மண்ணுக்கேற்ற வாழ்வைவிட்டு மேற்கத்தியக் கலாச்சாரத்துக்குள் புகுந்து கொண்ட தமிழன் பண்பாட்டின் சுவடைவிட்டு காசுக்குள் தன்னை முடக்கிக் கொண்டான் அதன்பின் காசைத்தாண்டிய பணத்துக்குள் தன்னை இழந்து வருகிறான் பணம் இல்லாதவன் அதனைத்தேட தூக்கத்தையும், நிம்மதியையும் தொலைக்கிறான் மாத்திரை உண்டால் தான் உறங்க முடியும் என்ற நிலையில் ஓராயிரம் மனிதர்கள் உள்ளனர். இன்றையச் சூழலில் பணப்பரிவர்த்தனை மிகப்பெரும் குழப்பத்தையும் சிக்கலையும் ஏற்படுத்தியதை அறிவோம். இவை யாவும் பணத்தைப் பெறவும், காக்கவுமான தாக்கத்தின் விளைவேயாகும்

பணம் முடக்கப்பட்ட போதும் தற்பொழுதும் ஆட்சியாளர்கள் நினைத்தது நடந்ததா? என்றால், மிகப்பெரிய கேள்விக்குறியே எஞ்சி நிற்கின்றது.

இன்று பணமாகிப்போன நாணயம் (காசு) அன்றும் புழக்கத்தில் இருந்தது எப்படி என்பதை சற்று அவதானிக்கும் முகத்தான் இக்கட்டுரை முகிழ்கிறது.

பண்டமாற்று :

பண்டமாற்றுமுறையில் அன்றாடத் தேவைகளுக்கான பொருள்கள் மாற்றப்பட்டு பண்டமாற்றுப் பரிவர்த்தனை நிகழ்ந்ததை இலக்கியப் பதிவுகள் வழி அறியமுடிகின்றது. ஊர்த்தெருக்களில் உப்பு விற்க வந்த உமணப்பெண் உப்பை நெல்லுக்கு மாற்றியதை,

"கதழ்கோல் உமணர்காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல்உப்பெனச்
சேரிவிலை மாறு கூறலின்" (அகம்.140 5–8)

எனும் வரிகளால் உப்பைக் கொடுத்து நெல்லைப் பெற்றதை அவதானிக்க முடிகின்றது. பண்டமாற்று பரிவர்த்தனை நிகழ்ந்ததை பதிவுசெய்கிறது.

கபிலர் பாடியதாக குறுந்தொகையில் ஒரு பாடல்,

"காந்தள்அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென
கடுங்கண் வேழத்துக்கோடு நொடுத்துண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரை" (குறு 100–3.5)

கொல்லி மலைமேல் சிறுகுடி மக்கள் வாழ்ந்தனர். அவர்களின் சுற்றம் பசியோடு இருந்தது. அவர்களின் பசியைப்போக்க தங்களிடமிருந்த யானைத் தந்தங்களைத் தானியத்துக்கு மாற்றி சோறு சமைத்து உண்டதை இப்பாடல் உணர்த்துகின்றது

"தேன்நெய்யொடு கிழங்கு மாறியோர்
மீன்நெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும்"

பொருநர் ஆற்றுப்படை214–217

பண்டமாற்று முறையில் வேடர்கள் தேன், கிழங்கு போன்றவற்றைக் கொடுத்து மதுபானக் கடைகளில் இறைச்சி பெற்றதையும், உழவர்கள் கரும்பையும், அவலையும் கொடுத்து வறுத்த மான் இறைச்சியையும், மதுவையும் பெற்றதையும் முத்துச்சிப்பியைக் கொடுத்து கள்ளைப் பெற்றனர் என்பதையும் அறியலாம். இப்படி இருந்தது பண்டமாற்று பரிவர்த்தனை

எயினர்கள் மது அருந்துவதற்கு மதுபானக் கடைக்கு வந்தும் மது அருந்துவதற்கு எந்தப் பொருளும் இன்மையால், காட்டில் வேட்டையாடி யானைத் தந்தத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறோம் இதற்கு ஈடாக இப்பொழுது கள்ளைக் கொடு என்று கேட்கும் நிலையைக் கூறுகிறது அகப்பாடல்,

"வரிகிளர் பணைத்தோள் வயிறணி திதலை
அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பின்
மகிழ் தொடை பெறா அர் ஆகி நனைகவுள்
கான யானை வெண்கோடு சுட்டி
மன்றாடு புதல்வன் புன்றலை நீவும்
அருமுனைப் பாக்கம்" (அகம் 245–8–13)

கடன் அடிப்படையில் பண்டமாற்று மூலம் தேவைகள் தீர்த்துக் கொள்ளப்பட்டதை அறியமுடிகின்றது. பண்டமாற்று முறையில் உணவுப் பொருள்கள் பெறப்பட்டதை இப்பதிவுகள் வழி அறிய முடிகின்றது.

நாணயம் [காசு]

பண்டமாற்றுமுறை வழக்கத்தில் இருந்த அதே காலத்தில் காசும் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு ஆதாரமாக காசு பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. தமிழர்கள் உள்நாட்டு வணிகம் மட்டுமின்றி கடல்கடந்தும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அதனைத் திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற அடிகள் விளக்குகின்றன.

நம் நாட்டில் கிடைக்கும் கிரேக்க, ரோமானிய நாணயங்கள் தமிழனின் வணிகப் பயன்பாட்டில் நாணயப் பயன்பாடும் இருந்ததை விளக்குவதாக அமைகின்றது. பொற்காசுகள் புழக்கத்தில் இருந்ததை,

'புல்லிலை நெல்லிப் புகரில் பசுங்காய்
கல்லதர் மருங்கில் கடுவளி உதிர்ப்ப
பொலஞ் செய் காசின் பொற்பத் தாஅம்' (அகம் 363–6–8)

பெண்கள் இன்று கழுத்தில் காசு மாலை என்ற கழுத்தணியை அணிவதை பார்த்திருக்கின்றோம். இத்தகு காசு மாலை அன்றே மகளிரின் அணியாக இருந்தது அன்று காசு பயன்பாட்டில் இருந்ததால் தான் காசை அணியாக செய்து அணியும் வழக்கம் அன்று இருந்தது போலும். அன்று காசை அணியாகச் செய்து இடுப்பில் அணிந்ததை,

'ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த
பொலஞ்செய் பல்காசு அணிந்த அல்குல்' (புறம் 353–1–2)

என்ற புறப்பாடல் அடிகள் அதனை உறுதிசெய்கின்றன.

"அம்மா மேனி ஐதமை நுசுப்பின்
பல்காசு நிரைத்த கோடேந் தல்குல்
மெல்லியல் குறுமகள்" (அகம் 75–18–20)

இப்படியாக காசுமாலையை அரையைச் சுற்றி மேகலையாக அணிந்து கொண்டதை அறியமுடிகின்றது. முல்லை நிலம் வாழ் இடைச்சியர் நெய்யை பண்டமாற்று செய்யாமல் காசுக்கும் விற்றுள்ளனர். விற்ற அந்தக் காசுகளைச் சேமித்து வைத்தார்கள். குறிப்பிட்ட தொகை காசு சேர்ந்த போது அக்காசுக்கு பசுவையும், எருமையையும் விலைக்கு வாங்கினார்கள்.

'நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர்' (பெரும்பாண் 164–166)

பண்டமாற்று மற்றுமல்லாமல் காசு பயன்பாடும் இருந்ததை இப்பாடல் அடிகள் விளக்குகின்றன.

காணம் [நாணயம்] :

காணம் என்பது அன்று பொற்காசுக்கு வழங்கப்பட்ட பெயராகும். சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றுள்ள பதிற்றுப்பத்து பத்துசேரமன்னர்கள் பற்றிய செய்திகளை நமக்கு தெரிவிப்பதுடன் அக்காலச் சமூகச் சூழலில் காணம் (நாணயம்) பயன்படுத்தப்பட்டதைத் தெரிவிக்கிறது.

'காணம் இலியென கையுதிற் கோடலும்'

என்ற அடியில் காணம் என்ற சொல்லாட்சி செல்வத்தைக் (நாணயம்) குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது பதிற்றுப் பத்தின் நான்காம் பத்தினைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார்க்கு களங்காய்க் கண்ணி, நார்முடிச் சேரல், 40 நூறாயிரம் பொன் (அதாவது நான்கு இலட்சம்) பரிசாகக் கொடுத்தான். இதைப் போலவே பதிற்றுப்பத்து ஆறாம் பத்தின் பாட்டுடைத் தலைவனான ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அதனைப் பாடிய காக்கை பாடினியார் நச்செள்ளையார்க்கு நூறாயிரம் காணம் வழங்கினான்

இவற்றைப் போலவே பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தின் பாட்டுடைத்தலைவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை தன்னைப் பாடிய பெருங்குன்றூர் கிழார்க்கு முப்பதாயிரம் காணம் பரிசாகக் கொடுத்தான் என்பதை பதிற்றுப்பத்தின் பாயிரம் தெரிவிக்கின்றது.

சோழர் வரலாற்றில் மிகச் சிறந்த மன்னனாக போற்றப்படும் கரிகாற் சோழன் பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்கு நூறாயிரம் காணம் பரிசு வழங்கினான்

இவ்வாறு காணம் என்னும் பொற்காசு வழக்கத்தில் இருந்ததை அறிகிறோம். காசு வாழ்வின் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளவும், ஆபரணங்களாக அணிந்து கொள்ளவும் பயன்படுத்தப்பட்டதுடன் பிறருக்குக் கொடுத்து மகிழவும் பயன்பட்டது தமிழை வளர்க்கும் இலக்கிய புலமைக்குப் பரிசாகவும் காணம் வழங்கப்பட்டுள்ளதை பார்க்கும் போது நாணயத்தின் உயரிய பயன்பாடு எத்தகையது என்பதை அறிய முடிகின்றது.

பண்டமாற்றுமுறையும் காசின் புழக்கமும் சமுதாய வாழ்வை சீரோடு வைத்திருந்ததை உணரும் போது சங்ககாலத்து உயரிய பண்பாட்டின் மீது இன்னும் கொஞ்சம் உயரிய மதிப்பீடு உள்ளத்தில் எழுகின்றது என்பதே உண்மை. நாணயத்தின் அன்றைய கட்டமைப்பு சமூக நலனுக்கு எந்த வகையிலும் இடையூறு வகுத்ததாகத் தெரியவில்லை. தேவையில்லாமல் அது பயன்படுத்தப்பட்டது, பதுக்கப்பட்டது, முடக்கப்பட்டது, வீசி எறியப்பட்டது பல உயிரை பறிப்பதற்கு உறுதுணை புரிந்தது, மனிதத் தன்மையை நாணயம் அழித்தது என்ற பதிவுகள் இல்லை. நாணயம் வாழவின் அன்றாட தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவும் சமூகப் பொருளாதார உயர்வுக்காகவும் இலக்கிய வளர்ச்சிக்காகவும் அன்பை கொடுத்து அன்பை பெறுவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

தமிழன் என்று சொல்வோம்!
தலைநிமிர்ந்து நிற்போம்!

தமிழில் ஒப்பியல் இலக்கிய, இலக்கண ஆய்வுகள்

பேராசிரியர் **உ.கருப்பத்தேவன்,**
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை–625 021
கைபேசி : 94435 71776

சென்ற இதழின் தொடர்ச்சி :

மறுவருணனை ஆய்வும் மொழியமைப்பு வருணனையும் :

மொழியியல் கோட்பாடுகளின் செல்வாக்கினால் இலக்கண நூல்கள் பல மறுவருணனை ஆய்வு செய்யப்பட்டு, மொழியமைப்புப் பற்றிய பல புதிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய இலக்கண ஆராய்ச்சிகளுள் பல மறு வருணனை ஆய்வே. எண்பது வரை நடந்த எழுத்ததிகார மறுவருணனை ஆய்வு செ வை சண்முகத்தின் *"எழுத்திலக்கணக் கோட்பாடு"* (அண்ணாமலை நகர், சிதம்பரம், 1980) என்ற நூலிலும், *"தொல்காப்பியம் – எழுத்து – மொழியியல் கூறுகள்–நூல்களின் அளவீடு"* Journal of Annamalai University, 1984 என்ற ஆய்வுக் கட்டுரையிலும் விளக்கப்பட்டுள்ளன அதன் பின்னர் எழுத்ததிகார ஆய்வு நூல்கள் நுட்பமாக வெளிவரவில்லை. சொல்லதிகாரத்தைப் பொறுத்த வரையில் தொல்காப்பிய ஆய்வின் வரலாற்றில் (கோ கிருஷ்ணமூர்த்தி, 1990) 1981 வரை நடந்த ஆய்வுகளை வகுத்தும் தொகுத்தும் கொடுத்துள்ளார். அதன் பின்னர் வெளிவந்த நூல்கள் வருமாறு:

1 பா.மல்லிகா	–	இலக்கண மரபில் இடைச் சொற்கள் (1981)
2.அ.சண்முகதாஸ்	–	தமிழ்மொழி இலக்கண இயல்புகள் (1982)
3. ச.அகத்தியலிங்கம்	–	தொல்காப்பியச் சிந்தனை (1985)
4. செ.வை.சண்முகம்	–	சொல்லிலக்கணக் கோட்பாடு, I, II, III (1984, 1986, 1992)
5. அ.காமாட்சி	–	தொல்காப்பியத்தில் வினைக் குறிப்பு (1989)

இந்த மறு வருணனை ஆய்வு வரலாற்றுக் கிளைமொழி ஆய்விற்கும் வழிவகுத்துள்ளது. இதற்குச் சான்றாகச் செ.வை.சண்முகத்தின் *'மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும் சங்ககாலம்'* (1989) என்ற நூலைக் குறிப்பிடலாம்.

இலக்கணக் கோட்பாட்டு ஆய்வுகள் :

மொழியியல் தாக்கத்தால் ஏற்பட்டதே இலக்கணக் கோட்பாட்டு ஆய்வாகும். இதற்குத் தெ.பொ மீனாட்சிசுந்தரனார் வித்திட்டு வழி காட்டியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ச.அகத்தியலிங்கம், க.முருகையன் ஆகியோர் எழுதிய *'தொல்காப்பிய மொழியியல்'* (1972) என்ற நூல் எழுத்து மற்றும் சொல்லிலக்கணக் கோட்பாடுகளை விளக்கியுள்ளது. செ.வை.சண்முகத்தின் எழுத்து, சொல்லிலக்கணக் கோட்பாட்டு வரிசை நூல்களும் இந்தத் துறையில்

குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் தொல்காப்பிய இலக்கணக் கோட்பாட்டு ஆய்வுகளே பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் எழுத்திலக்கணத்தில் நேமிநாதம், வீரசோழியம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய நூல்களின் கோட்பாடுகள் செ.வை சண்முகத்தின் *'எழுத்திலக்கணக் கோட்பாடு'* (1980) என்ற நூலில் கண்டறிந்து விளக்கப்பட்டுள்ளன.

வீரசோழியம் குறித்து சு.இராசாராம் *'வீரசோழிய இலக்கணக் கோட்பாடு'* (நாகர்கோவில், 1992) என்னும் நூலினை எழுதியுள்ளார். இது ஒரு புடைமாற்று மற்றும் புதுவகையைச் சார்ந்ததாகும் இந்த நூல் சோழர்களின் கால மொழிச் சூழல், இலக்கணக் கல்விப் பின்புலம் ஆகியனவற்றை ஆராய்ந்து இலக்கண உருவாக்கக் கோட்பாட்டை விளக்கி, வரலாற்றுச் சமூக மொழியியல் ஆய்வுக்கு (Historical Socio Linguistics Research) அடித்தளம் அமைத்துள்ளது ஆயினும், தமிழில் சொல்லிலக்கணக் கோட்பாட்டிற்கு இன்னும் வளர்ச்சி நிலையில் பெரும்பங்கு தேவைப்படுகின்றது உரையாசிரியர்களின் இலக்கணக் கோட்பாடுகள் தனிநூல்களாக வெளிவந்துள்ளன அவற்றுள், S V Shanmugham, Naccinarkkiniyar's Concept of Phonology, Annamalai Nagar, 1967 S V Subramaniyam, Phonology-A Critical Study of Tolkappiam, Nannul, Nagercoil, 1977 ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை மேலும் நெல்லை ந.சொக்கலிங்கம் 1985ல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகளின் அறுவகை இலக்கணத்தைத் தொல்காப்பியம் முதல் உவமான சங்கிரகம் தமிழ் யாப்பு நூல் வரை ஒப்பியல் நோக்கில் ஆய்வு செய்துள்ளார். அவ்வாய்வு 2013ஆம் ஆண்டு சாரதா பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. தமிழில் ஒப்பாய்வுக் களத்தில் இலக்கண ஒப்பாய்வுகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இலக்கிய வளர்ச்சிக்கு இத்தகைய ஆய்வுகளே உதவும்.

1. தமிழ் இலக்கண நூல்களுக்கிடையே ஒப்பாய்வு :

தமிழ் இலக்கணங்களை ஒன்றோடொன்று ஒப்பிடும் ஆராய்ச்சியில் தொல்காப்பிய–நன்னூல் ஒப்பாய்வே பழமையானது. சாமுவேல்பிள்ளை 1885இல் *'தொல்காப்பிய நன்னூல் ஒப்பீடு'* என்னும் நூலினை எழுதியுள்ளார். இதனையடுத்து, க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம்–நன்னூல் எழுத்ததிகாரம், அண்ணாமலை நகர், 1962, க வெள்ளைவாரணன், தொல்காப்பியம்–நன்னூல் சொல்லதிகாரம், சிதம்பரம், 1968 என்னும் இரண்டு ஒப்பிலக்கண ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன நன்னூல் அதற்கு முன்னர் எழுதப்பட்ட இலக்கண நூல்களில் ஏற்படுத்திய தாக்கத்தை G Vijayavenugopal, The Evaluation and Evaluation of Nannul, Annamalai Nagar, 1968 என்ற நூலிலும், S V Subramaniyam Phonology-A Critical Study of Tolkappiam, Nannul, Nagercoil, 1977 என்ற நூலிலும் விரிவாக ஆராய்ந்துள்ளனர் பல இலக்கண நூல்களில் ஒலிக்கூறுகளின் செல்வாக்குக் குறித்து விளக்கும் ஆராய்ச்சியாகவே இந்நூல்கள் அமைந்துள்ளன. உண்மையில் கூற வேண்டுமானால் செம்மையாகச் செய்யப்படும் தமிழ் இலக்கண ஒப்பாய்வுகள், தமிழ் மொழி வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியன குறித்த ஆய்வாக அமைய வேண்டும். இம்முறையிலான தமிழ் ஒப்பிலக்கண ஆய்வு நூல்கள் மிகவும் குறைவு

தமிழ்–பிறமொழி ஒப்பிலக்கண ஆய்வுகள் :

பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி போன்ற இலக்கண உரையாசிரியர்களே தமிழ் – வடமொழி இலக்கணக் கோட்பாடுகளை ஒப்பிட்டுச் சில கருத்துக்களைக்

கூறியுள்ளனர். P S Subramaniya Sastri, History of Grammatical Theories in Tamil Relation to the Grammatical Literature in Sanskrit, 1934 என்ற நூலில் தமிழ்–வடமொழி இலக்கணங்களின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார். அவர் தமிழின் இலக்கண ஒற்றுமை–வடமொழி இலக்கணத்தைக் கடனாகப் பெற்றதால் ஏற்பட்டது எனக் காட்டியுள்ளார். ஆயினும் அவருடைய கருத்து இன்று ஏற்கப்படவில்லை இதன் சில ஒற்றுமைகள் உலகப் பொதுமையானதாகும்

மொழியியல் ஆராய்ச்சி வளர்ந்த போது தொல்காப்பிய, பாணினி ஒற்றுமை வேற்றுமை இன்று ஓரளவு பரவலாக மேற்கொள்ளப்பெற்றுத் தொல்காப்பியரின் தனித்துவம் நிறுவப்பட்டுள்ளது.

1 K Meenakshi, "Treatment of Cases in Astadhyayi and Tolkappiam", ஆய்வுக்கோவை, 3.255–258, அண்ணாமலை நகர், 1971

2 K Meenakshi, "Treatment of Compounds in Astadhyayi and Tolkappiam" ஆய்வுக்கோவை, நான்காவது கருத்தரங்க மலர், பக்.469–474, திருவனந்தபுரம், 1972.

3 K Meenakshi, "Treatment of infinite verb in Astadhyayi and Tolkappiam" ஆய்வுக்கோவை–5, பக்.746–751, சென்னை, 1973.

4 சு.பாலசுப்பிரமணியன், *'தொல்காப்பியமும் பாணினியமும் ஓர் ஒப்பாய்வு'*, மொழியியல்–10,(1&2),1987

ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் ஒப்பாய்வு நிலையில் இதற்குச் சான்றளிக்கின்றன. ச வையாபுரிப்பிள்ளை 1951–1952இல் *'செந்தமிழ்'* இதழில் – *'தமிழும் மலையாளமும்'* (செந்தமிழ் 41, பக்.87–106) என்னும் ஒப்பாய்வு; மொழியியல் மற்றும் இலக்கண ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். மு இராகவையங்கார் *'கலைமகள்'* இதழில் *'மணிமேகலையும் புத்த ஜாதகமும்'* (*'கலைமகள்'* தொகுதி–1. பக் 159–170) என்னும் ஒப்பிலக்கிய ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். 1969ஆம் ஆண்டில் பொன் கோதண்டராமன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் `A Contrastive Analysis of Tamil and Telugu' என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார் 1969இல் S V Shanmugham அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்வு இதழில் `A Modern Evaluation of Viracoliyam' என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை (Journal of the Annamalai University, Vol,26,pp 65-78) எழுதியுள்ளார்.

1972இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் K Meenakshi, `Treatment of Nouns in Astadhyayi and Tholkappiyam' என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார் 1975ல் C George Hart என்பவர் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் (பெர்க்கிலி) `The poems of Ancient Tamil and their Sanskrit counter part' என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார். 1976இல் T P Meenakshi Sundaram, `Foreign Models in Tamil Grammar' (Trivandrum, Institute of Linguistics) என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளார். 1979–ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், ஏ.ஆதித்தன் The Grammar of Tholkappiyam and the Language of Patinenkilkanakku' என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார்.

1980இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் Anjali Annabai 'Tholkappiyam and the Language of Manimekalai' என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார். 1982இல் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்காப்பியக் கருத்தரங்கில் சா. தண்டபாணி தேசிகர் *'தொல்காப்பியமும் பாணினீயமும்'* என்னும் ஆய்வுக் கட்டுரையை அளித்துள்ளார். 1984இல் N Kumarasamy Raja என்பவர் 'Sanskrit Influence on Viracoliyam' (A medieval Tamil Grammer-JDL, Vol XIII, No 2 Trivandrum) என்னும் ஆய்வுக்கட்டுரை வழங்கியுள்ளார் 1985இல் பெ.சுயம்பு கேரளப் பல்கலைக்கழகத்தில் *'தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும் ஓர் ஒப்பாய்வு'* என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார். 1989இல் பெ சுயம்பு *'நன்னூலும் முத்துவீரியமும்'* (*'செந்தமிழ்'*, தொகுதி–83, பகுதி–3, மதுரைத் தமிழ்ச்சங்கம்) என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார்

1990இல் மா.பார்வதியம்மாள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் *'வீரசோழியம், நன்னூல் ஒப்பாய்வு'* என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார் 1992இல் சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மு.கு.ஜெகநாதராஜா *'தமிழும் பிராகிருதமும்'* என்னும் தலைப்பில் ஆய்வு நூலை எழுதியுள்ளார். 1994இல் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பொன் கோதண்டராமன் 'A comparative study of Tamil and Japanese' என்னும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தியுள்ளார் அது நூலாக வெளிவந்துள்ளது 1994இல் எஸ்.ஏ.ரெமிஜியுஸ் பரதராஜ் எழுதிய *'நன்னூல், இலக்கண விளக்கம்– ஓர் ஒப்பாய்வு'* (எழுத்து) என்னும் ஆய்வு நூலினை, கன்னியாகுமரி அகதா வெளியீட்டகம் வெளியிட்டுள்ளது. 1999இல் இரா அறவேந்தன் *'தமிழ், சிங்கள இலக்கண உறவு'* (திருவரசு வெளியீடு, விழுப்புரம்) என்னும் இலக்கண ஒப்பாய்வு நூலினை எழுதியுள்ளார்

2005இல் ஆ.கார்த்திகேயன் *'தமிழ், பிராகிருத உறவுகள்'* (அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்) என்னும் ஒப்பாய்வு நூலினை எழுதியுள்ளார். 2007இல் ப.குளோரி பொன்மொழி *'தொல்காப்பியம், முத்துவீரியம்–ஓர் ஒப்பாய்வு'* என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்துள்ளார். 2008இல் ப மருதநாயகம் *'தெ.பொ.மீயும் மேலை அறிஞரும்'* என்னும் ஒப்பாய்வு நூலினை (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) எழுதியுள்ளார்.

2010இல் த.வேல்மயில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் *'நன்னூலும் பின்னைய இலக்கண நூல்களும்'* என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார். இவ்ஆய்வுரையை சென்னை காவ்யா பதிப்பகம் நூலாக வெளியிட்டுள்ளது. 2010இல் இ.ரெ சதீஷ்பாபு *'நன்னூல், மலையாள மொழியிலக்கணம் கூறும் வருக்க எழுத்துக்கள்'* (நியூவிகன் வெளியீடு, தஞ்சாவூர்) என்னும் ஒப்பாய்வு நூலினை எழுதியுள்ளார்.2011இல் வே.புனிதமலர், தமிழ் ஆய்வாளர் மன்றக் கருத்தரங்கிற்காகத் *'தொன்னூல் விளக்கமும் நன்னூலும்'* (பக்.1154–1156) என்னும் ஒப்பாய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார் 2012இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் வே.சண்முகராஜ் *'நன்னூல், சுவாமிநாதம்–ஓர் ஒப்பாய்வு'* என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார். வடமொழி பிராதிசாக்கியங்களும்

தொல்காப்பியர் பிறப்பியலும் விரிவாக ஆராயப்பட்டு, தொல்காப்பியர் நேரடியாக வடமொழி இலக்கணக் கருத்துக்களைக் கடனாகக் கொண்டிருக்க இயலாது என்பதை V S Rajam 'A Comparative Study of Two Ancient Grammatical Traditions. The Tamil Tolkappiam Compared with Sanskrit Rik Pratskiya, Taittyreya Pratioakhya and Astadhyayi', Unpublished Ph D , Thesis, University of Pensylvania, 1981 என்னும் ஆய்வுரையில் நிறுவிக்காட்டியுள்ளார்.

தமிழ்—உலக மொழி இலக்கணங்கள் ஒப்பீடு :

பாபிலோனியா, கிரேக்கம், வடமொழி போன்ற உலக மொழிகளிலும் நடைபெற்ற இலக்கண ஆய்வின் வளர்ச்சிப் பாதையில் அதன் வளர்ச்சிக்கான காரணங்கள் பின்புலத்தில் தொல்காப்பியத் தோற்றத்திற்கான காரணங்களை ஊகித்து அறியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கு *'இலக்கணச் சமூகவியல்'* (Sociology of Grammar) எனப் பெயரிடப் பெற்றுள்ளது

1 செ வை. சணமுகம், மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும் (சங்க காலம்), சென்னை, *1989*, 2 செ வை சண்முகம், *மலையாள மொழியின் முதல் இலக்கணம்,* சென்னை, 1992, ஆகிய நூல்கள் இதற்குச் சான்றாகும் இது மலையாள மொழியின் முதல் இலக்கணத்தை ஆராயவும், பல்லவர்–பாண்டியர் கால இலக்கணத்தை ஆராயவும் (செ.வை.சண்முகம், இலக்கண உருவாக்கம்/ பல்லவர்–பாண்டியர் காலம், சென்னை, 1994) வழிகாட்டியாக இலக்கணச் சமூகவியல் ஆய்விற்கு வலுச்சேர்த்துள்ளது. இத்துறையில் கா.சிவத்தம்பியின் *'இலக்கணமும் சமூக உறவுகளும்'* (1982) என்ற நூலும் குறிப்பிடத்தக்கது. ஆயினும் சோழர் கால இலக்கண நூல்களும், பிற்கால இலக்கண நூல்களும் இம்முறையில் முழுமையாக ஆராயப்படவில்லை.

இலக்கணமும் மொழியும்—ஒப்பீடு :

தொல்காப்பியத்தின் மொழியமைப்பை இலக்கிய மொழிகளோடு ஒப்பிடும் முயற்சி மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியை T Natarajan, 'The Language of Sangam Literature and Tolkappiam' Madurai, 1977 என்ற நூலில் செய்து காட்டியுள்ளார். இந்த முறையில் பிற தமிழ் இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆராயலாம்.

இலக்கணம்—பிற திராவிட மொழிகள் ஒப்பீடு :

தமிழ் இலக்கணத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதற்குப் பிற திராவிட மொழிகள், குறிப்பாகப் பழங்குடி மககள் பேசும் திராவிட மொழிகளின் ஒப்பாய்வு துணைசெய்யும் இதனை M Israel,Presidential Address to Dravidian Linguistics, IJDL, XXIII, No I, 1-26-1994 இல் குறிப்பிட்டுள்ளார் இரண்டு இலக்கண, இலக்கியப் படைப்புக்களிடையே காணலாகும் பொதுத் தன்மைகளைக் காண்பதே ஒப்பாய்வு ஆகும். இரு நூல்களின் பொதுத்தன்மைகளில் வேறுபாடு மிகுந்து காணப்படும்போது ஒப்பீடு வலுப்பெறுகின்றது. இலக்கண, இலக்கியப் படைப்புக்களில் மேற்கொள்ளப்பெற்ற ஒப்பாய்வு, இன்று உலக மொழிகளிலும் மேற்கொள்ளப்பெறறு வருகின்றது. ஒப்பீட்டாய்வுகளால் மொழி மற்றும் இலக்கண–இலக்கியப் படைப்புக்களின் ஒற்றுமைக் கூறுகளையும் வேறுபாடுகளையும் தெளிவாக்க முடிகின்றது.

இலக்கிய உலகில் ஒப்பீட்டாய்வாளர்கள் தம் புலமையாற்றலால் தம் புலமையை வெளிப்படுத்தியிருப்பதோடு, பன்மொழி இலக்கியங்களையும், உலக இலக்கியங்களையும் மொழிபெயர்ப்புச் செய்து தத்தம் தாய்மொழிகளில் அறிமுகம் செய்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஒப்பிலக்கண வரலாற்று முறை வளர்ந்தது அதனையொட்டி அயர்லாந்திலிருந்து தமிழகத்திற்குச் சமயப் பிரச்சாரத்திற்காக வந்த கால்டுவெல், தென்னிந்தியாவில் *தமிழ், மலையாளம், கன்னடம், தோடா, குடகு, தெலுங்கு* போன்ற பல மொழிகளை ஆராய்ந்து அவைகளைத் *'திராவிட மொழிகள்'* என்று பெயா கொடுத்து ஒப்பிலக்கண ஆராய்ச்சியை கி.பி. 1856இல் *'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'* என்ற நூலாக வெளியிட்டதன் வாயிலாகத் தொடங்கி வைத்தார் (செ வை சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப.23) என்பர்.

தமிழர்களின் ஒப்பியல் ஆய்விற்கு இந்நூலே முன்னோடியாகும் ஒப்பீட்டாய்வில் ஒருமொழி–பிறமொழி இலக்கிய ஒப்பீடு, ஒரு மொழியினுள்ளேயே ஒப்பீடு, ஓரிலக்கியம்–மற்றோர் இலக்கியம் ஒப்பீடு ஓரிலக்கிய வகையைப் பிற இலக்கிய வகைமைகளுடன் ஒப்பிடுதல், இலக்கணக் கோட்பாடுகளில் ஒப்பீடு எனப் பலவகைகள் உள்ளன. வெள்ளைவாரணனாரின் தொல்காப்பியம்–நன்னூல் எழுத்து, சொல்லிலக்கண ஒப்பீட்டினை வகைமை ஒப்பீடாகக் கொள்ளலாம். 'மற்றொரு நிலையில் ஒப்பீட்டு முறையில் பொதுவான சிக்கல்களை ஆராய்வது, கருப்பொருள், வடிவம், இலக்கியவகை, பாத்திரம், உணர்ச்சித் தூண்டல் வகை, மூலம், பண்பாடு, நாகரிகத்தின் அனைத்துவகை வடிவங்களோடும் உள்ள தொடர்பு பற்றிய ஆய்வு என்னும் கருத்தினை வை சச்சிதானந்தம் ஏற்றுப் போற்றியுள்ளார்' (வை. சச்சிதானந்தன், ஒப்பிலக்கியம், ப 33).

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களும் தமிழறிஞர்களும் நன்னூலையே பெரிதும் விரும்பிக் கற்று வந்தனர். இருபதாம் நூற்றாண்டில் வரலாற்று ஒப்பிலக்கண முறை தோன்றி வளர்ந்ததால் தொல்காப்பியம் (செ.வை.சண்முகம், மு.நூ.ப 24) ஏற்றம் பெற்றது தொல்காபயியத்திற்குப் பல்வேறு புதிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டன இதனால் நன்னூலையே அறிஞர்கள் விரும்பிக் கற்றனர் என்பதை அறியமுடிகின்றது. தொல்காப்பியத்தின் வழிநூலான நன்னூலைச் சுருக்கம் மற்றும் எளிமை கருதி அறிஞர்கள் பயின்றனர் எனக் கொள்ளலாம்.

தமிழும் பிற திராவிட மொழிகளும் :

மலையாள மொழி இலக்கணங்களைத் தமிழ் இலக்கணங்களோடு ஒப்பிடும் முயற்சியை A Meenakshi Sundaranar, Lilatilakam-A few glimpses Seminar on Grammatical Theories in Malayalam, Trivandrum, 1965 என்ற நூலாக வெளியிடப்பெறாத ஆய்வுரையிலும், தெலுங்கு மொழி இலக்கணத்தை மலையாளத்தோடு ஒப்பிடும் முயற்சியை 'Tamil and Telugu Grammars-Seminar on Grammatical Theories in Telugu, Hyderabad, 1965 என்ற நூலிலும் தொடங்கியிருப்பதைக் காணமுடிகின்றது. இளையபெருமாளும் இத்தகைய இலக்கண ஒப்பாய்வைச் செய்துள்ளார் செ வை சண்முகம், நான்கு திராவிட மொழிகளில் காணப்பெறும் சொல் வகைப்பாட்டைத் *'திராவிட மொழி இலக்கணச் சொல்வகை'* (புலமை, 12 2 1986) என்ற கட்டுரையில் ஆராய்ந்துள்ளார்

தொல்காப்பியரின் ஒப்பீட்டாய்வு :

தமிழில் முதன்முதலில் தொல்காப்பியரே ஒப்பீட்டு ஆய்விற்கு வழிவகுத்துச் சென்றுள்ளார். அவர் வடமொழி இலக்கண ஆய்வு முறையை ஒப்பிட்டு நோக்கும் ஆய்வு முறைமையினை எழுத்ததிகாரம் பிறப்பியல் நூற்பாக்களில் காணமுடிகின்றது. இதனை,

"அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே"

(தொல்.எழுத்து பிறப்பியல்.நூற்.**102**)

"அஃதிவண் நுவலா தெழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபு நுவன்றிசினே"

(தொல்.எழுத்து.பிறப்பியல்.நூற்.**103**)

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களால் அறிய முடிகின்றது

புற ஒப்பீடும் அக ஒப்பீடும் :

தமிழ் இலக்கணக் கோட்பாடுகளைப் பிறமொழி இலக்கணக் கொள்கைகளோடும் கோட்பாடுகளோடும் ஒப்பிட்டு ஆராய்வதும், மொழியியல் நோக்கில் ஒப்பிட்டு ஆராய்வதும் புற ஒப்பீட்டு முறையாகும். ஒரு மொழியின் இலக்கணத்தை, அதே மொழியில் தோன்றிய மற்றொரு இலக்கண நூலோடு ஒப்பீடு செய்வது அக ஒப்பீடாகும்.

வெள்ளைவாரணனாரின் தொல்காப்பியம்–நன்னூல் ஒப்பீடு முதலில் அக ஒப்பீட்டாய்வாகத் தோன்றியதே ஆகும். இத்துறையில் நன்னூல் உரையாசிரியர்களும் வழிகாட்டியுள்ளதாகக் (செ.வை.சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப.24) குறிப்பிட்டுள்ளார்.

மயிலைநாதர் :

நன்னூலின் முதல் உரையாசிரியரான மயிலைநாதர் (கி.பி.14ஆம் நூற்றாண்டு), '*எழுத்தெனப்படுவ*' என ஆசிரியர் தொல்காப்பியனாரும் இவ்வாறு முதல், சார்பென வகுத்துக் கொண்டார் என்க. அஃதே அவர் சார்பெழுத்தென மூன்று கொண்டாரெனில் அஃதே நன்று சொன்னாய்! ஒழிந்தவை எப்பாற்படும் என்றார்க்கு மூன்றாவதோர் பகுதி சொல்லல் ஆவதின்மையானும் முதலெழுத்தாம் தன்மை அவற்றிற்கு இன்மையானும் சார்பில் தோன்றுதலானும் இப்பத்தும் சார்பாகவே கொள்ள வேண்டுமென்பது'' (மயிலைநாதர் (உரை.ஆ) நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், ப.23) எனச் சுட்டியுள்ளதால் அவர் தொல்காப்பியத்தை ஒப்புநோக்கி நன்னூலுக்கு உரையெழுதியுள்ளமையை அறிய முடிகிறது.

சங்கரநமச்சிவாயர் :

நன்னூல் உரையாசிரியர்களுள் மற்றொருவராகிய சங்கர நமச்சிவாயர் (கி.பி.17ஆம் நூற்றாண்டு), ''ஒன்று இரண்டு பல என்பன வடசொல் வழக்கு.

ஒன்றல்லனவெல்லாம் பல என்பது தமிழ் நடையாகலின் வடநூல் வழக்குப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியர் *'ஓரெழுத்தொரு மொழி'* என்று மொழிந்துள்ளதால் வடமொழி வழக்கினும் தமிழ்மொழி வழக்கு வேறானது என அறியலாம் '' (சங்கர நமச்சிவாயர் (உரை.ஆ), நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரையும். ப 69) எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியம்—நன்னூல் ஒப்பீட்டின் முன்னோடி :

கி.பி 1885இல் வெளிவந்த இ சாமுவேல் பிள்ளையின் *'தொல்காப்பியம்–நன்னூல்'* என்பதே முதல் ஒப்பீட்டு நூலாகும். அவர் இந்நூலில் இரு நூல்களிலும் காணப்பெறும் செய்திகளை இயல் முறையில் ஒப்புமை காட்டியுள்ளார் தேவையான இடங்களில் ஆங்கிலத்தில் விளக்கங்களும் தந்துள்ளார் இதுவே தமிழில் ஒப்பீட்டு முறையில் பதிப்பிக்கப் பெற்ற முதல் நூலாகும்

வெள்ளைவாரணனாரின் ஒப்பீட்டாய்வு நூல்கள் :

எந்த நூலையும் (எதனையும்) குறிப்பாக இலக்கண விதிகளை ஒப்பிட்டுக்காட்டித் தெளிவுபடுத்துவதே வெள்ளைவாரணாரின் ஆய்வு நெறியாகும். அவர் தொல்காப்பியம், நன்னூல் எழுத்ததிகார ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ச்சி நோக்கில் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்வு இதழில் 1941ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து எழுதி வந்தார் பின்னர் அந்த ஆய்வு, 1962இல் தனி நூலாக வெளிவந்தது இந்நூல் பல பதிப்புக்களைப் பெற்றுள்ளது. *'தொல்காப்பியம், நன்னூல் சொல்லதிகாரம்'* முதல் பதிப்பாக 1971இல் வெளியிடப் பெற்றுள்ளது. இதன் மறுபதிப்பை நிழற்படப் பதிப்பாகத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1984இல் வெளியிட்டுள்ளது

வெள்ளைவாரணனாரின் ஒப்பீட்டாய்வு நெறிகள் :

வெள்ளைவாரணனாரின் ஒப்பீட்டாய்வு நெறிகள தற்திறன் சார்ந்தவை. ஒப்பீட்டுக் களத்தை அமைத்தல், சுருங்கக் கூறல், எழுத்ததிகார இயல் சுருக்கம், சொல்லதிகார இயல் சுருக்கம், பல இயல்களின கருத்துக்களை ஓரியலில் கூறுதல், பல நூற்பாக்களுக்கு ஒரு நூற்பா அமைத்தல், உரையாசிரியர்களை ஒப்பிட்டுக் காணல், தமிழ் மரபு சுட்டல் எனப் பகுத்துக் கொண்டு வெள்ளைவாரணனாரின் ஒப்பீட்டாய்வு நெறிகளை விளக்கலாம்

ஒப்பீட்டுக் களத்தை அமைத்தல் :

ஒப்பிடும் பொருள்களில் சமநிலை, மிகுநிலை, குறைநிலை ஆகியவை ஒப்பீட்டுக் களங்களாகும். (தி நெல்லையப்பன், வெள்ளைவாரணம், ப 44) இந்த அடிப்படையில் அணுகும்போது வெள்ளைவாரணனார் நூல்களை ஒபபிடுவதற்கு முன்பாக ஒரு முன்னுரையை அமைத்துள்ளார் இபபகுதியில இரு நூலாசிரியர்களின் கால ஆராய்ச்சி இடம் பெறுகின்றது வெள்ளைவாரணனார் கால வேறுபாட்டுடன் கூடிய இரு நூல்களில் ஒப்பிடுவதற்குரிய பொதுத்தன்மை எவையெவையென ஆராய்ந்துள்ளார் சமநிலையில் அணுக வேண்டிய இரு நூல்களில் ஒரு நூலான தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களும் காணப்படுகின்றன நன்னூலில தற்பொழுது காணப்படுகின்ற இரு அதிகாரங்களே அன்றி ஒரு அதிகாரம் (பொருளதிகாரம்)

கிடைக்காமல் போயிருக்கலாம் எனக் கருதுவதற்குரிய சான்றுகளை வெள்ளைவாரணனார் முன்னுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

நன்னூலில் *'பழையன கழிதலும்'* என்னும் நூற்பா புறனடையாகச் சொல்லதிகார இறுதியில் காணப்படுகின்றது. அந்நூற்பாவிற்கு உரையெழுதிய மயிலைநாதர், இந்நூலில் சொன்ன ஐந்ததிகாரத்திற்கும் சிங்கநோக்காய் நோக்காமல் நிற்பது ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று. இவ்வாறு மேல்வரும் அதிகாரங்களிலும் கண்டுகொள்க (க.வெள்ளைவாரணன், *'முன்னுரை'*, தொல்காப்பியம், நன்னூல் எழுத்ததிகாரம், ப.6) எனக் கூறியுள்ள உரைக் கருத்தை வெள்ளைவாரணனார் எடுத்துக் காட்டியுள்ளார்.

'நுதலிய பொருள் அரும்பொருள் ஐந்தென உணர்த்தினமையின் இந்நூலில் கூறிய பொருள், யாப்பு, அணி என்னும் மூன்று அதிகாரங்களும் அக்காலத்துள்ளன போலும்' எனச் சங்கரநமச்சிவாயரும் தம் கருத்தைக் கூறியுள்ளார். இதனையும் வெள்ளைவாரணனார் எடுத்துக் கூறியுள்ளார். தமிழ் நன்னூற்றை களஞ்சிலக்கியம் எனவரும் பெரிய திருமொழித் தனியனுக்கு, "தமிழுக்கு எழுத்து முதலான ஐந்து இலக்கணத்தையும் வெளியிடுவதான நன்னூல் என்றவொரு சாத்திரம் உண்டென அதன் உரையாசிரியர் ஸ்ரீபிள்ளைலோகாசாரியசீயர் உரை கூறியுள்ள கருத்தை வெள்ளைவாரணனார் எடுத்துக் கூறித் தொல்காப்பியத்தைப் போலவே நன்னூலும் ஐந்து இலக்கணங்களைக் கூறும் நூலாகும்" (க.வெள்ளைவாரணன், முன்னுரை தொல்காப்பிய நன்னூல் எழுத்து.ப.7) எனச் சுட்டிக் கூறியுள்ளார்.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் பிற இலக்கணங்கள் கலவாதவாறு எழுத்திலக்கணம் மட்டுமே கூறப்பட்டுள்ள நிலையை, *'எழுத்து முறை காட்டி'* என்ற பனம்பாரனார் கூற்றுக்கு நச்சினார்க்கினியர் முன்னுள்ள நூல்களில் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் மயங்கிக் கூறிய முறையை மாற்றி மக்கள் எழுத்துக்களின் தனித்த இயல்பினை உணர வேண்டி ஆசிரியர் அதனை வேறோர் அதிகாரம் ஆக்கினார்' (க.வெள்ளைவாரணன், முன்னுரை தொல்காப்பிய நன்னூல் எழுத்து, ப.12) என்ற பகுதியை வெள்ளைவாரணனார் எடுத்துக்காட்டி, ஒப்பீட்டு ஆய்விற்குரிய இரண்டாம் களத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளார்.

எழுத்ததிகாரத்தில் அமைக்கப்பட்ட ஒப்பீட்டுக் களங்கள் சொல்லதி காரத்திலும் கொள்ளப் பெற்றன. அத்துடன் வெள்ளைவாரணனார் சில நெறிமுறைகளையும் படிப்போர்க்கு வழிகாட்டுதலாகக் கூறியுள்ளார். தொல்காப்பிய நூற்பாக்களுக்குத் தமிழ் எண்ணால் எண்ணிக்கையும், கொடுத்துள்ள நிலையை வெள்ளைவாரணனார் சுட்டிக் காட்டியுள்ளார். படிப்போர்க்கு மயக்கம் தோன்றாத நிலையில் இந்த எண்கள் தரப்பெற்றுள்ளன. காலத்தால் முற்பட்ட தொல்காப்பியத்திற்குத் தமிழ் எண்ணையும், காலத்தால் பிற்பட்ட நன்னூலுக்குப் பிற்கால வழக்கிலுள்ள எண்ணையும் வெள்ளைவாரணனார் கொடுத்துள்ளார்.

சுருங்கக் கூறல் :

நன்னூலில் பவணந்தியார் மேற்கொண்டுள்ள சுருக்க முறைகளை எழுத்ததிகார இயல் சுருக்கம், சொல்லதிகார இயல் சுருக்கம், பல இயல்களில் அமைந்துள்ள கருத்துக்களை ஒரு நூற்பாவில் கூறுதல், பல நூற்பாக்களுக்கு ஒரு நூற்பா அமைத்தல், அடி குறைத்து இயற்றுதல் எனப் பகுத்து ஆராய்ந்து விளக்கியுள்ளார் வெள்ளைவாரணனார்

எழுத்ததிகார இயல் சுருக்கம் :

தொல்காப்பியர் தம் எழுத்ததிகாரத்தை நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என ஒன்பது இயல்களாக அமைத்துள்ளார். தொல்காப்பியத்தின் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் ஆகிய மூன்று இயல்களின் விதிகளை நன்னூலார் எழுத்தியலில் அமைத்துளளார். தொல்காப்பியத்தின் ஏனைய புணரியல், தொகை மரபு, உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்னும் ஐந்து இயல்களின் விதிகளை நன்னூலார் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல் என்னும் இரண்டு இயல்களில் விளக்கிக் கூறியுள்ளார். உருபியல் விதிகளை நன்னூலார் உருபுப் புணரியலில் அடக்கிக் கூறியுள்ளார். 'இம்முறை பவணத்தியாரது சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறனை வெளிப்படுத்துவதாகும்' (க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம், நன்னூல்–எழுத்ததிகாரம், ப.20) என வெள்ளைவாரணனார் குறிப்பிட்டுள்ளார். அவர் தொல்காப்பிய இயல்களை நன்னூல் இயல்களோடு ஒப்பிட்டு எந்தெந்தச் செய்திகள் எந்தெந்த இயல்களுக்குப் பொருந்தும் என வரையறுத்துக் கொண்டு அதன் பின்னர் நன்னூலில் காணப்படுகின்ற புதிய வரவினைச் சுட்டிக்காட்டி, அதற்குரிய காரணங்களையும் விளக்கிக் கூறியுள்ளார்.

நன்னூலாரின் பதவியலும் வடமொழியாக்கமும் :

பவணந்தியார் முன்னையத் தமிழ் இலக்கண நூல்களில் காணப்பெறாத பகுபதம், பகாப்பதம் போன்ற செய்திகளைப் புணர்ச்சியின் இலக்கணத்தை விளக்குவதற்கு முன்னர்க்கூறி அவ்வியலுக்குப் 'பதவியல்' எனப் பெயரிட்டுள்ளார். அவ்வியலில் அவர் வடமொழியாக்கத்தையும் பேசியுள்ளார். அவ்வியலில் பவணந்தியார் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப் பகுபத உறுப்பினை ஆறாகப் பிரித்து ஒரு மொழிக்கு இலக்கணம் கூறியுள்ளார். இதற்கு, 'வடமொழியை ஒட்டிப் பகுபத இலக்கணம் கூறியமைக்கு ஆரியச் சொற்கள் அளவு கடந்து தமிழ் நூல்களுள் புகுந்தமை காரணமாகும்' (க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம், நன்னூல்–எழுத்ததிகாரம் பக் 20–22) என வெள்ளைவாரணனார் காரணம் கூறியுள்ளார் தொல்காப்பியர் ஒன்பது இயல்களில் கூறிய எழுத்திலக்கணச் செய்திகளை நன்னூலார் நான்கு இயல்களில் சுருக்கிக் கூறியிருப்பதோடு, தம் காலத்திய மொழி நிலையை ஒட்டிப் பவணந்தியார் பதவியல் என ஒரியலை அமைத்து அதில் புதுவகை இலக்கணம் கூறியிருப்பதையும் வெள்ளைவாரணனார் சிறப்பாக்க் கருதுகின்றார்.

+++

சங்கச் செய்திகள்

05.07.2017 அன்று முற்பகல் 11 மணியளவில் *கு.அழகிரிசாமி* அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெறறது இளம் இலக்கியம் இரண்டாமாண்டு மாணவர் *மு.வினோத்குமார்* தமது உரையில் "கு.அழகிரிசாமி அவர்கள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி மற்றும் புதுமைப்பித்தனுக்கு அடுத்த தலைமுறை எழுத்தாளர்களில் முக்கியமானவராகக் கருதப்படுபவர் ஆவார். தம்முடைய எழுத்தின் மூலமும் இடைவிடாத தேடலின் மூலமும் தேசிய உணர்வுகளும், புதிய சமூக மறுமலர்ச்சிக்கான கருததுகளும், புதிய இலக்கிய உணர்வுகளும் பெருகிக் கொண்டிருந்த காலகட்டத்தில் வாழந்த அவர், கரிசல் காட்டு வாழ்க்கைச் சூழலின் பல்வேறு உணர்வுகளைச் சிறபபாகப் படம் பிடித்துக் காட்டியவர் தம் குறுகிய வாழ்நாளில் நூறறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், நாவல்கள், மொழிபெயர்ப்புகள், பத்திரிகை, பதிப்பு, கடிதங்கள், பேச்சு என முழு இலக்கியவாதியாக வாழ்ந்தவர் நடைமுறை வாழ்க்கை சார்ந்தும் அழகியல் அணுகுமுறை சார்ந்தும் பல்வேறு நிலைப்பாடுகளை வெளிப்படுத்தக் கட்டுரை வடிவத்தை அவர் சிறப்பாகப் பயன்படுத்தியவர். சில பிறமொழிக் கவிதைகளையும் ஆங்கிலத்தின் வழியாக அவர் மொழி பெயர்த்திருக்கிறார். 1970ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி அவருக்குப் பரிசு வழங்கிக் கௌரவித்தது என்றும் குறிப்பிட்டார் இந்நிகழ்வில கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர் முன்னதாக *கு.அழகிரிசாமி* அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

06.07.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் செந்தமிழ்க் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. நிகழவிற்குக் கல்லூரிச் செயலாளர் இராணி *ந.இலட்சுமி குமரன் சேதுபதி* அவர்கள் தலைமை தாங்கினார். சங்கச் செயலாளர் வழக்கறிஞர் ச மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார் மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் *கூ.கூடலிங்கம்* அவர்கள் முதலாமாண்டு வகுப்புக்களைத் துவக்கிவைத்து ஆற்றிய சிறப்புரையில மாணவர்களின் வளர்ச்சி குறித்தும், புதிய கண்டுபிடிப்புக்கள் குறித்தும் எடுத்துரைத்தார். கையெழுத்திடத் தெரியாதவராக இருந்தாலும் அவர் தம் பிள்ளைகளைக் கல்வி பயில வைத்து மகிழும் பெற்றோர்களே சிறந்த பெற்றோர்கள் ஆவர் என்றார்

மதுரையில் நடந்து முடிந்த பாரத ரத்னா புரட்சித் தலைவர் *எம்.ஜி.ஆர்.* அவர்களின் நூற்றாண்டு விழாவில் செந்தமிழ்க் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி பங்கு பெற்று சிறந்த இடத்தினைப் பெற்றுள்ளது இதற்குப் பெரும் முயற்சி எடுத்து உழைத்த நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்களுக்குச் சிறப்புச் செய்யப்பட்டது. முன்னதாகக் கல்லூரி முதல்வர் வரவேற்புரையும், இறுதியில் துணை முதல்வர் நன்றியுரையும் வழங்கினர். நிகழ்வில உதவிப்பேராசிரியர்கள் மற்றும் முதலாமாண்டு மாணவர்கள் அவர்களின் பெற்றோர்களுடன் கலந்து கொணடனர்.

06.07.2017 அன்று முற்பகல் 10.00 மணியளவில் *மயிலை சிவமுத்து* அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளம் இலக்கியம்

மூன்றாமாண்டு மாணவர் *இரா.விக்னேஷ்* தமது உரையில், "குழந்தை இலக்கியத்தில் வெற்றி பெற்ற மிகச் சிலருள் மயிலை சிவமுத்து ஒருவர், அவர் எழுதிய நூல்களுள் தலைசிறந்து விளங்கியது நித்தில வாசகம் என்னும் தமிழ்ப் பாடப் புத்தக வரிசையாகும், திருக்குறளுக்கு இனிய, எளிய உரையையும் எழுதியுள்ளார். மாணவர்கள் தாய்மொழியாகிய தமிழில் பெரும்பற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் *சிவமுத்து* அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தவர். 1938ஆம் ஆண்டு தமிழகத்துச் சிறு மழலைகளின் மேல் இந்தி மொழிப் படிப்பு வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டபோது கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்தவர். தமிழுக்கு அவர் ஆற்றிய தலையாய பணிகளைப் பாராட்டும் விதத்தில் 1960ஆம் ஆண்டு சென்னையில் தமிழறிஞர்கள் ஒன்றுகூடி *'தமிழ்நெறிக் காவலர்'* என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டுப் பெற்ற சிறப்புக்குரியவர்" என்று அவரின் பெருமைகளைக் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மயிலை சிவமுத்து அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

07.07.2017 அன்று செந்தமிழ்க் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி நடைபெற்றது முதல்வர் மற்றும் துணை முதல்வர் முன்னிலையுரை ஆற்றினர். உதவிப் பேராசிரியர்கள் சிறப்புரை ஆற்றினர். முனைவர் *மா.செல்வத்தரசி* வரவேற்புரையும் முனைவர் *பா.நேருஜி* நன்றியுரையும் ஆற்றினர்.

08 07.2017 அன்று முற்பகல் 11.00 மணியளவில் திங்கள் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. சங்கச் செயலாளர் வழக்குரைஞர் திருமிகு *ச.மாரியப்பமுரளி* அவர்கள் தலைமை தாங்கினார். "தமிழர் நாகரிகமும் பண்பாடும்" என்ற தலைப்பில் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில், "நகரிலிருந்து வந்தது நகரியம்; அதுவே நாகரிகம் எனப்பட்டது, வீடுகளில் திண்ணை இருந்ததால் இரவு வரும் பயணியர் தங்கிச் சென்றனர். இது பண்பாடு. விவசாயம் செய்வதற்கு நிலத்தைப் பயன்படுத்துவது போல நம் மனதைப் பண்படுத்துவது பண்பாடு. தனக்காக வாழ்பவன் நாகரிகத்தைப் பேணுவான். பிறருக்காக வாழ்பவன் பண்பாட்டோடு வாழ்கிறான், அறிவினால் செய்வது அனைத்தும் நாகரிகம், பண்பினால் உருவாவது பண்பாடு" என்று குறிப்பிட்டார். முனைவர் *கி.வேணுகா* அவர்கள் வரவேற்புரையும் முனைவர் *பா.நேருஜி* அவர்கள் நன்றியுரையும் வழங்கினர். சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்கள் கலந்து கொண்டனர்.

11.07.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் இரா இாகவையங்கார் அவர்களின் நினைவேந்தல் நடைபெற்றது. முதுகலை இரண்டாமாண்டு மாணவி அ.அபிநயா அவர்கள் தமது உரையில், "தமிழ்ப் பேறிஞர் இரா இராகவையங்கார் இன்னமுதத் தமிழைத் தமது உயிருக்கு நேராக வைத்துப் போற்றியவர் என்றும், *பாஸ்கர சேதுபதி, முத்துராமலிங்க ராஜராஜேஸ்வர சேதுபதி, சண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி* ஆகிய மூன்று தலைமுறைக்கு அரசவைப் புலவராகத் திகழ்ந்த பெருமைக்குரியவர் என்றும், மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் வழியாக

வெளிவரும் *'செந்தமிழ்'* இதழின் முதல் ஆசிரியர் என்றும், நூல்களைப் பதிப்பித்தல், அரிய நூல்களுக்கு ஆராய்ச்சி உரை எழுதுதல், பிற மொழிகளிலிருந்து குறிப்பாக வடமொழிக் காவியங்களை மொழிபெயர்த்தல், படைப்பிலக்கியம் போன்ற அனைத்துத் துறைகளிலும் பெரும்புகழ் பெற்று விளங்கியவர் அவர் என்றார். அருந்தமிழ் வளர்க்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் வெளியீடான *"பாரிகாதை"* என்னும் மிகச் சிறந்த நூலைப் படைத்த இலக்கியப் பேராசான், பன்மீன் நடுவே பால்மதி ஒளி வீசித் திகழ்வது போலப் பெரும் புலவர்களின் நடுவே புகழொளி வீசிப் பறந்தவர்" என்றும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக *இரா.இராகவையங்கார்* அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

11.07.2017 அன்று முற்பகல் **11.00** மணியளவில் செந்தமிழ்க் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டமும் தமிழ்நாடு காவல்துறையும் இணைந்து நடத்தும் கருத்தரங்கம் நடைபெற்றது. மதுரை மாவட்ட நுண்ணறிவுப் பிரிவுத் துணை ஆணையர் முனைவர் *ஆ.மணிவண்ணன்* அவர்கள், "பெண்களின் பாதுகாப்பு" என்ற தலைப்பில் ஆற்றிய சிறப்புரையில், பெண்கள் சந்திக்கும் ஆபத்துகள் குறித்தும், தற்காப்பு முறைகள் குறித்தும் விரிவாகப் பேசினார். எஸ்.ஓ.எஸ் எனப்படும் மதுரை மாநகரக் காவல் துறைச் செயலியின் பயன்பாடு குறித்து மாணவ மாணவியருக்கு விளக்கப்பட்டது. ஆபத்து ஏதேனும் நிகழும் பட்சத்தில் அச்செயலியின் உதவியால் காவல் துறையினரைக் குற்றம் நிகழும் இடத்திற்கே வரவழைக்க முடியும் என்பதை, மாணவ மாணவியரின் கைபேசியில் எஸ்.ஓ.எஸ் செயலியைப் பதிவிறக்கம் செய்து காட்டி அச்செயலி செயல்படும் விதம் குறித்துத் தெளிவுபடுத்தினார். இந்நிகழ்விற்கு முதல்வர் மற்றும் துணைமுதல்வர் முறையே தலைமை மற்றும் முன்னிலை வகித்தனர். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை வரவேற்புரையும் முனைவர் *பா.நேருஜி* நன்றியுரையும் முனைவர் *மா.செல்வத்தரசி* தொகுப்புரையும் வழங்கினர்.

18.07.2017 அன்று செந்தமிழ்க் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் மாணவ மாணவியருக்குப் புகையிலை, மது, செல்போனால் வரும் ஆபத்து மற்றும் பாதுகாப்பு குறித்த அறிவுரையும், விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வினை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

19.07.2017 அன்று முற்பகல் **10.00** மணியளவில் செந்தமிழ்க் கல்லூரியின் மேனாள் செயலாளர், வழக்கறிஞர் *மா.சங்கரபாண்டியனார்* அவர்களின் நினைவேந்தல் நிகழ்வும், இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து *'செம்மொழி'* விருது பெற்ற சங்கப் பொதுக்குழு உறுப்பினர்கள் பேராசிரியர் அ.தட்சிணாமூர்த்தி, பேராசிரியர் *உ.பாலசுப்பிரமணியன்* ஆகியோருக்குப் பாராட்டு விழாவும் நடைபெற்றது. மாட்சிமை தங்கிய முகவை மன்னர் *நா.குமரன் சேதுபதி* அவர்கள் தலைமை தாங்கினார். கல்லூரிச் செயலாளர் திருமிகு. *இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி* அவர்கள் முன்னிலை வகித்தார். சங்கச் செயலாளர் வழக்குரைஞர் *ச.மாரியப்பமுரளி* அவர்கள் வரவேற்புரை நல்கினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் *ம.திருமலை* அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். துணைமுதல்வர் முனைவர் *கி.வேணுகா* அவர்கள் நன்றியுரை ஆற்றினார். மதுரை

காமராசர் பல்கலைக்கழகத்தின் ஒப்பிலக்கியத் துறைத் தலைவரும் செந்தமிழ்க் கல்லூரியின் முன்னாள் மாணவருமான முனைவர் *உ.கருப்பத்தேவன்* அவர்கள் தனது பேராசிரியர் *க.செயமூர்த்தி* அவர்களின் பெயரில் ரூ.50,000–ஐம்பதாயிரம் நல்கி அறக்கட்டளை ஒன்றினை நிறுவினார்

19.07.2017 அன்று பிற்பகல் **2.00** மணியளவில் *சுவாமி விபுலாநந்தர் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை* இரண்டாமாண்டு மாணவி *சி.ராமேஸ்வரி* தமது உரையில் "கிழக்கிலங்கையில் பிறந்து தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றிய சுவாமி விபுலாநந்தர் இலங்கைத் தமிழாகரர், இசைத் தமிழ்ப் பேராசான் எனும் பெருமைக்குரியவர் என்றும், மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் நடத்திய தேர்வில் பங்கேற்றுப் பண்டிதர் பட்டம் பெற்றவர் என்றும், இலங்கையிலிருந்து வந்து இப்பட்டத்தை முதன்முதல் பெற்றவர் சுவாமி விபுலாநந்தரே என்றும், தமிழ்ச் சங்க வெளியீடான *'செந்தமிழ்'* எனும் இதழில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தவர் என்றும், இசைத்தமிழ் ஆய்வு செய்து *'யாழ் நூல்'* எனும் சிறந்த நூலைப் படைத்தவர் என்றும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக 'யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்கம்' என்ற கழகத்தை அமைத்துத் தமிழை வளர்த்தவர் என்றும், மகாகவி பாரதியின் பாடல்களை முதன்முதலில் இலங்கையில் பரவிடச் செய்த தமிழறிஞர் சுவாமி விபுலாநந்தர் அவர்களே என்றும், இலங்கை நாட்டில் உள்ள பாடசாலைகளிடையே கொண்டாடப்படும் அகில இலஙகைத் தமிழ் மொழி தினம் அவரது மறைவு தினத்திலேதான் கொண்டாடப்படுகின்றது" என்றும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக சுவாமி விபுலாநந்தர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

21.07.2017 அன்று முற்பகல் **11.00** மணியளவில் வேதநாயகம் பிள்ளை அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது துணை முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் தமது உரையில், "வேதநாகம் பிள்ளை தமிழ் மொழியில் நாவல் இலக்கியத்தின் முன்னோடி என்று தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் அனைவராலும் கொண்டாடப்படுபவர் என்றும், முதல் தமிழ் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் எழுதியவர் என்றும், பெண் கல்வி, பெண்களின் விடுதலை மற்றும் பெண் முன்னேற்றம் குறித்த கருத்துக்களை மையமாக வைத்துப் புதினம் படைத்தவர் என்றும், சமயப் போராட்டங்களும் சமய மாற்றங்களும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் சமயங்களுக்கிடையில் சமரசம் காணும் முயற்சியில் சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் என்னும் கீர்த்தனை நூலை வெளியிட்டவர் என்றும், அரங்குகளில் வடமொழிக் கீர்த்தனைகளும் தெலுங்குக் கீர்த்தனைகளும் பாடப்பட்டு வந்த காலத்தில், தமிழில் கீர்த்தனைகள் மிகுதியாக இல்லாத குறையைப் போக்கும் வகையில் சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள், சத்திய வேதக் கீர்த்தனைகள் ஆகிய இசைப்பாடல் நூல்களை வெளியிட்டுப், பிற்காலத்தில் தோன்றிய தமிழிசை இயக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் என்றும், மொழிபெயர்ப்புத் துறையிலும் வேதநாயகம் பிள்ளையின் பணிகள் தமிழர்களுக்கு முன்னோடியாக உள்ளன" என்றும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர் முன்னதாக வேதநாயகம் பிள்ளை அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

செப்டம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

தனிநாயக அடிகளார்
(01, செப்டம்பர் 1981)

சி. இலக்குவனார்
(3, செப்டம்பர் 1973)

சி. பாலசுப்பிரமணியனார்
(10, செப்டம்பர் 1998)

பாரதியார்
(11, செப்டம்பர் 1921)

மறைமலையடிகள்
(15, செப்டம்பர் 1950)

திரு.வி.க.
(17, செப்டம்பர் 1953)



கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை
(26, செப்டம்பர் 1954)

இராய. சொக்கலிங்கனார்
(30, செப்டம்பர் 1974)

பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **ம.வெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.
54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன

முனைவர் **சு.விஜயன்**
முதல்வர் (பொ.), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்,
நான்காம் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001. தமிழ்நாடு.

From
THE SECRETARY,
The Fourth Tamil Sangam,
54, Tamil Sangam Road,
Madurai - 625 001.
Tamilnadu.

Book Post

பெறுநர் / To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை – 625 001. 0452 - 2343707
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு, மதுரை – 625 020. அலைபேசி : 94874 45403

அச்சிட்டோர்: **சிறீ அச்சகம்** 147, கீழவெளி வீதி, மதுரை–1.
அலைபேசி : 97894 95738